பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 12 புதன்கிழமை (26-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:213

### தீவகத்தில் புலிகள் தாக்கப்பட்டதைக் கண்டித்து

# யாழ்நகரில் இருந்து ஊர்காவற்றுறைக்கு நாளை மாபெரும் மக்கள் எழுச்சிப்பேரணி!

யாழ்ப்பாணம்,ஜூன்26

தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் பொருட்டு நிராயுதபாணிகளாக நின்று மக்கள் பணிசெய்த விடுதலைப் புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோர் மீதான தாக்குதல் மற்றும் கொலை முயற்சிகளைக் கண்டித்தும் -

நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனும் -

யாழ்ப்பாணத்தில் இருந்து அல்லைப்பிட்டி ஊடாக ஊர்காவற்றுறைக்கு மாபெரும் மக்கள் பேரணி ஒன்றை நாளை காலை 10 மணிக்கு நடத்தவிருப்பதாக யாழ்மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து முற்பகல் 10 மணிக்குப் புறப்படும் பேரணி, ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரியைச் சென்றடையும். அங்கு மாபெரும் கண்டனக் கூட்டம் நடத்தப்படவிருப்பதாகவும் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்தப் பேரணி தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மனிதநேய அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கூட்டுறவு, தனியார் நிறுவனங்கள் மற்றும் யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியம் என பல்வேறு பொது அமைப்புகள் இணைந்து இம்மக்கள் பேரணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

வியாபாரநிலையம், அரச மற்றும் தனியார், கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிவோர் தங்கள் பணியை நிறுத்தி மக்கள் பேரணியில் பங்குகொண்டு சமாதானவிரோத சக்திகளை முறியடித்து நீதிக்கானதும் நிரந்தர சமாதானத்துக்குமான நிரந்தர வழிவகைகளைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டுமென ஒன்றியம் அறைகூவல் விடுக்கிறது.

பேரணியில் பங்கேற்க வசதியாக வடமராட்சி, தென்மராட்சி, வலிகா

(14ஆம் பக்கம் பார்க்க)

# தீவக சம்பவம் குறித்து விசாரிக்க மூவர் கொண்ட ஆணைக்குழு!

## புலிகளின் பிரதிநிதியும் அதில் இடம்பெறுவார்

கொழும்பு,ஜூன்26

**விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன், துணைப் பொறுப்பாளர் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பக்கசார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள மூவர் கொண்ட சுயாதீன ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.**

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இத்தகவலை சமாதான நடவடிக்கைகளுக்கான செயலணித் தலைவர் பேர்னார்ட் குணதிலக அறிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி வேலணையில் வைத்து விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து வேல

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜயலத் தமிழகத்துக்கு விஜயம்

சென்னை,ஜூன்26

இலங்கையின் புனர்வாழ்வு மீள் குடியேற்ற, அகதிகள் விவகார அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார். தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகள் குறித்து அறிந்து விரிவான அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ளவே அவர் தமிழகத்துக்கு வந்திருக்கிறார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்து பேச்சு நடத்தவிருக்கும் அமைச்சர் ஜயவர்த்தன, இலங்கை அகதிகள் முகாம்களையும் சென்று பார்வையிடுவார்.

இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்புவது தொடர்பான ஏற்பாடுகளை அவர் தமிழ்நாடு அதிகாரிகளுடன் ஆராய்ந்து தீர்மானிப்பார் என்று தெரிகிறது. அவர் தமிழ் நாட்டில் 9 நாள்கள் தங்கியிருப்பார். (ம-6)

## நாளைய பேரணிக்கு கூட்டமைப்பும் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜூன்26

நாளை நடைபெறும் சமாதானத்துக்கான கண்டனப் பேரணிக்கு பூரண ஆதரவு வழங்குவதாக தமிழ் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

வேலணையில் நடந்த சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள கூட்டமைப்பு, நாளைய பேரணியில் கலந்து சமாதானத்தை வலியுறுத்துமாறு

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பிக்கு எதிராக நகரில் நேற்று மறியல்

யாழ்ப்பாணம்,ஜூன்26

ஜே.வி.பியின் சமாதானவிரோதப் போக்கைக் கண்டித்தும் -

சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி. மேற்கொண்டுவரும் பிரசாரங்கள், பேரணிகள் என்பவற்றுக்கு எதிராகவும் -

ஜே.வி.பியின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டை சிங்கள மக்கள் புறக்கணிக்கவேண்டும் எனக் கோரியும் ஐக்கிய சோசலிஷக் கட்சியின் ஏற்பாட்டிலான மறியற்போராட்டம் நேற்று யாழ். மத்திய பஸ்நிலையப் பகுதியில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் கலவரம், கல்வீச்சு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது

மூதூர்,ஜூன்26

மூதூரில் அடுத்தடுத்து வன்முறைச் சம்பவங்கள்; விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஹர்த்தாலுடன் ஆர்ப்பாட்டப் பேரணியும் நடந்தது. அப்போது கல்வீச்சுக்களால் கலவரம் மூண்டது. வெட்டுக்கொத்துகள் நடைபெற்றன. சிலர் காயமடைந்தனர். ஆள்கடத்தல் சம்பவங்களும் இடம்பெற்றன. அமைதியை நிலைநாட்ட இராணுவத்தினர் அழைக்கப்பட்டனர். பொலீஸ் ஊரடங்கு பிறப்பித்தது.

ஹர்த்தால் அறிவிப்போடு பேரணி ஆரம்பித்துச் சென்றபோது சில கடைகள் திறந்திருந்தன. அந்தக் கடைகளை மூடச் செய்யும் முயற்சி நடந்தது. அப்போதே கல்வீச்சுக்கள் ஆரம்பமாகின.

கல்வீச்சைத் தொடர்ந்து குத்து வெட்டுக்களும் நடந்தன. முற்றுமுழுதாக கலவர நிலை தலைதூக்கியது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கு நகரங்கள் ஸ்தம்பிதம்!

## புலிகளுக்கு எதிரான வன்செயலுக்கு மக்கள் கிளர்ந்தெழுந்து ஆட்சேபம்!!

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பாடசாலைகள், அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. கடைகள், வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துகள் நடைபெறவில்லை. பொதுமக்கள் நடமாட்டமும் இன்றி வீதிகள் வெறிச்சோடின.

யாழ்.தீவகப் பகுதியில் புலிகளின் அரசியல் துறை உறுப்பினர் இருவர் மீதான தாக்குதலையும் மூதூரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பணிமனை மீதான தாக்குதலையும் கண்டித்தே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் திருமலை நகரம், மூதூர் கிழக்கு, தெற்கு, ஈச்சிலம்பற்று ஆகிய இடங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்

(14ஆம் பக்கம் பார்க்க)



கண்காணிப்புக்குழு அலுவலகம் நோக்கிப் பேரணி



அலுவலகத்துள் நுழை[illegible] பேரணி



கண்காணிப்புக்குழு அதிகாரிகளைச் சந்தித்து மகஜர் கையளிப்பு

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நீதிக்காகக் குரல் கொடுப்போம்

யாழ்ப்பாணம்,ஜுன்26

அளப்பரிய அர்ப்பணிப்புக்களால் கிடைத்த அரிய சமாதானச் சூழலை குழப்பி, போரின் மூலம் சுயலாபம் தேட முற்படும் இனவிரோத - சமாதான விரோத - கும்பல்களின் அக்கிரமங்களுக்கெதிராக கிளர்ந்தெழுந்து போராடுவோம்.

- இவ்வாறு நாளை நடைபெறவுள்ள கண்டனப் பேரணி தொடர்பாக யாழ். வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் துணைப் பொறுப்பாளர் தயாளன் ஆகியோர் கடந்த 20 ஆம் திகதி வேலணையில் வைத்து தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து நாளை யாழ்.நகரில் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

இப்பேரணியை ஏற்பாடு செய்துள்ள யாழ்.வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காலங்காலமாக சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களால் திட்டமிட்டு உருவாக்கி தீவிரப்படுத்தப்பட்ட கொடிய இனவாதப் போரால், தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களும் அழிவுகளும் அவமானங்களும் கொஞ்சமல்ல. சிங்கள மக்கள் மத்தியில் பௌத்த இனவாத வெறியை ஊட்டி தமிழ்மக்களின் உரிமைகளையும் உயிர், உடைமைகளையும் போட்டி போட்டுப பறித்து அதன்மூலம் ஆட்சிப் பீடம் ஏறினார்கள் அன்றைய சிங்கள அரசியல்வாதிகள்.

இந்தத் திட்டமிட்ட தமிழின அழிப்புக்கெதிராக அன்றைய எமது அரசியல் தலைவர்களும், தமிழ் மக்களும அறவழியில் நின்று உரிமைக் குரல் எழுப்பினர். அந்நீதியின் குரல்கள் அரசின் பொலீஸ், இராணுவ இயந்திரத்தால் நெரிக்கப்பட்டன. அன்பு வழியில நின்று வாழ்வுரிமை கேட்ட தமிழ் மக்களுக்கு கிடைத்ததெல்லாம் அடியும உதையும் சிறையும் சித்திரவதையும் கொலைகளும் அழிவுகளும்தான். அடிமைகளாகக்கூட தமிழர்கள் இலங்கைத் தீவிலே வாழமுடியாத ஓர் அவல நிலை ஏற்பட்டபோதுதான் வரலாறு ஆயுதப் போராட்டமாக மாறியது. இந்த ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சியும் அதன் பலமுமே சிங்கள அரசினதும் சர்வதேசத்தினதும் மாற்றத்திற்கு காரணமானது என்பதே வரலாற்று உண்மை.

சிங்கள தேசம் சமாதானத்தின் அவசியத்தை உணர்ந்து கொண்டது. இதன் பயனாகத்தான் ஸ்ரீலங்காவின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தமிழீழத்தின் தேசியத் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது. சமாதானத்துக்கான ஆணையை சிங்கள மக்கள் அரசிற்கு வழங்கிய போதும், அதற்கு எதிரான கோஷங்களும் ஆர்ப்பாட்டங்களும் கண்டனக் கூட்டங்களும் ஊர்வலங்களும் தென்னிலங்கையில் நடந்த வண்ணமே இருக்கின்றன. ஆனால் வடகிழக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக - சமாதானத்துக்கு எதிராக - ஒரு தமிழன் தானும் இதுவரை குரல் கொடுக்கவில்லை. மாறாக இங்கு நடக்கின்ற வெகுஜனப் போராட்டங்களெல்லாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு ஆதரவாக - சமாதானத்துக்கு ஆதரவாகவே - நடைபெறுகின்றன. இந்த வேறுபாட்டை உலகமும், சிங்கள தேசமும், ஏன் இங்கு இருக்கின்ற படைத்தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டும்.

நாங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு ஆதரவாகவும் அதில் கூறப்பட்ட விடயங்களை காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவுமே இந்தப் போராட்டங்களை நடத்துகின்றோம். ஏனெனில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அத்திவாரத்திலே தான் எதிர்கால சமாதானத்திற்கான கோபுரம் கட்டியெழுப்ப முடியும் அந்த அசைக்க முடியாத நம்பிக்கையில்தான் இந்த வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். இனிக் காலதாமதாகும் ஒவ்வொரு கணமும் சமாதானத்துக்கு ஆபத்தை விளைவிப்பதாகவே அமையும். இதுவரை பல புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் நடந்தேறிவிட்டன. அதன் உச்சக்கட்டம்தான் கடந்த 20 ஆம் திகதி தீவகத்தில் நடந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மீதான கொலை முயற்சி. இந்த சமாதான விரோத, காட்டு மிராண்டித் தனமும் கோழைத்தனமான அக்கிரமங்களை நாம் இனியும் கண்மூடித்தனமாக பார்த்திருக்க முடியாது.

அரசாங்கம் இந்த சமாதான விரோதிகளுக்கெதிராக காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை விரைவாக அமுல்படுத்தி சமாதானத்தை முன்னெடுக்க வேண்டும். தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசி நிரந்தரமான, நீதியான தீர்வைக்காண வேண்டும்.

அளப்பரிய அர்ப்பணிப்புக்களால் கிடைத்த இந்த அரிய சமாதானச் சூழலை குழப்பிபோரின் மூலம் சுயலாபம் தேட முற்படும் இனவிரோத - சமாதானவிரோத - கும்பல்களின் அக்கிரமங்களுக் கெதிராக கிழந்தெழுந்து போராடுவோம்.

நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம் அதற்காக அனைவரும் ஒன்றுபட்டு எழுவோம் - என்றுள்ளது. (ஒ)

## 'முதுசொமாக...' நூல் அறிமுகம்

தாவடி,ஜுன்26

தூண்டி வெளியீடாக 'முதுசொமாக...' எனும் சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக அரங்கு இன்று புதன் கிழமை நடைபெறுகிறது.

வதிரி இ.இராஜேஸ்கண்ணனின் இந்த நூல் வெளியீடு யாழ்.பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-13-ரி)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுன்26

யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறையினரால் நடத்தப்பட்டுவரும் கருத்தரங்குத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் 'புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல் கோலங்கள்' எனும் தொனிப் பொருளில் புகையிரதத் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதி வணிக அத்தியட்சகர் த.விநாயகமூர்த்தி கருத்துரை வழங்கவுள்ளார். (ஒ-12)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுன்26

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திவரும் 'ரொப் ரென்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் வி.கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம வருமாறு:-

- பி.ப. 4மணி - கலட்டி ஐக்கிய வி.க. எதிர் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் வி.க.
- பி.ப. 5 மணி - வதிரி யங்லயன்ஸ் வி.கழகம் எதிர் வதிரி டயமன்ஸ் வி.க. (ஒ-ரி)

* * *

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தினரால் நடத்தப்பட்டுவரும் தாச்சிசுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பி.பகல் 4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் ஆனந்தா வி.கழகம் - இணுவில் கலா ஜோதி வி.கழகமும் பங்குபற்றுகின்றன. (ஒ-ரி)

# நிமலராஜன் கொலை வழக்கு ஜூலை 5வரை ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம்,ஜுன்26

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜ்ன் படுகொலை தொடர்பான வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது குறிப்பிட்ட வழக்கு விசாரணை தொடர்பான அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் கால அவகாசம் வழங்குமாறு மன்றில் கேட்டுக் கொண்டதை அடுத்து வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதிக்கு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா ஒத்திவைத்தார்.

அத்துடன் பொலீஸாரால் முன்பு மன்றில் ஆஜர் செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (ஜெகன்) மற்றும் வாகனப் பொறுப்பாளர் விஸ்வன் ஆகியோரை எதிர் வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-10)

# மிதிவெடி அபாயம் குறித்து படையினர் எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்,ஜூலை26

நிலக்கண்ணிவெடிகளில் இருந்து பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் பாதுகாப்பற்ற பகுதிகளுக்குள் நுழைய வேண்டாம் என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.


இது தொடர்பாக பலாலி இராணுவ ஊடகத்துறை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆள்களுக்கெதிரான நிலக்கண்ணிவெடிகளினால் ஏற்படும் அனர்த்தங்கள் அதிகரித்துள்ளன. இது தொடர்பாக இதற்கு முன்னரும் பாதுகாப்பற்ற பகுதிகளுக்குள் உட்பிரவேசிக்க வேண்டாம் என பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர். அந்த அறிவித்தல்களை கடைபிடிக்காத மக்களே மிதிவெடி அனர்த்தங்களுக்கு ஆளாகியுள்ளனர். எனவே தமக்கு சந்தேகமான பகுதிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிக்கும் முன்னர், அப்பகுதியில் வசிக்கும் அயலவர்களிடம் அல்லது அருகில் உள்ள இராணுவ முகாமுகக்குச் சென்று கேட்டறிந்து கொள்ளுமாறு பாதுகாப்புப் படையினர் கேட்டுக்கொள்கின்றனர் - என்றுள்ளது.




யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் ஐக்கிய சோசலிஷக் கட்சியின் ஏற்பாட்டில் நடந்த ஜே.வி.பிக்கு எதிரான மறியற் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களையும் அவர்கள் வைத்திருந்த போராட்ட வாசகங்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:தேவராஜன்)

ஜப்பான் தென்கொரியா
உலகக் கிண்ண கால்பந்து
2002 FIFA WORLD CUP KOREA JAPAN
31.05.2002 - 30.06.2002



ஜேர்மனிய வீரர் கோல்ஸ் தலைகீழாக எம்பி பந்தை உதைக்கிறார்.

# உலகக் கிண்ண கனவிலிருந்து விடைபெறுகிறது தென்கொரியா

சியோல்,ஜுன்26

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆடுவதற்கு ஜேர்மனி தகுதி பெற்றுள்ளது. இதன்மூலம் கிண்ணத்தை சுவீகரிக்கும் நோக்கிலான தென்கொரியாவின் நீண்ட பயணத்தை அது முடிவுக்குக் கொண்டுவந்தது. நேற்று நடந்த அரையிறுதி ஆட்டத்தில் 1-0 என்ற கோல் அடிப்படையில் ஜேர்மனி வென்றது.

இலங்கை நேரப்படி மாலை 5.30 மணிக்கு நேற்றைய அரையிறுதி ஆட்டம் ஆரம்பமானது. ஆரம்பம் முதலே இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதின. ஆனால் ஜேர்மன் அணியின் கையே ஓங்கியிருந்தது. இந்த ஆட்டத்தைப் பார்ப்பதற்காக 60ஆயிரம் மக்கள் சியோல் மைதானத்தில் திரண்டிருந்தனர். 70 லட்சம் தென்கொரிய மக்கள் தமது வீரர்களின் வெற்றிக்காக பிரார்த்தித்தபடி தொலைக்காட்சிகளில் வைத்த கண்களை எடுக்கவில்லை.

ஆட்டம் ஆரம்பமானது முதல் இரு அணிகளும் விட்டுக்கொடுக்காமல் ஆடின. முதல் பாதி ஆட்டம்வரை எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. ஜேர்மனியின் முன்கள வீரர்களான மிரோஸ்லவ் கோல்ஸ் மற்றும் மார்க்கோ போட ஆகியோர் தென்கொரிய வீரர்களின் தீவிர கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டார்கள். இதனால் அவர்களது ஆட்டம் நேற்று சோபிக்கவில்லை.

ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் தென்கொரியாவுக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பு ஜேர்மனிய கோல் காப்பாளரின் திறமையால் தவறிப் போனது. தென்கொரிய வீரர் லீ சுன் - சூ மிக அழகாக ஜேர்மனிய கோல் காப்பாளர் ஒலிவர் கானை ஏமாற்றிவிட்டு பந்தை மிக நேர்த்தியாக உதைத்தார். ஆனால் பந்து செல்லும் திசையை சடுதியாக - மிகச் சரியாக - கணித்த கான், தனக்கு வலது புறம் பாய்ந்து சீறிவந்த பந்தை அபாரமாகத் தடுத்தார். இதன் மூலம் இந்தப் போட்டித் தொடரின் மிகச் சிறந்த கோல்காப்பாளர் தான் என்பதை அவர் நிரூபித்தார்.

இந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் எந்த அணியும் கோல் அடிக்காமலேயே முடிவுற்றது.

பின்பாதி ஆட்டம் ஆரம்பமாகி நீண்ட நேரமாகியும் கூட இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை. பின்பாதி ஆட்டத்தில் தென்கொரிய முன்கள வீரர்களான ஆன் ஜு - ஹவான், ஹவான் சுன் - ஹொங் மற்றும் லீ மின் - சுங் ஆகியோர் முன்னேறிச் சென்று தாக்குதல் ஆட்டம் நடத்த ஆரம்பித்தனர். ஆனால் அவர்களால் ஜேர்மனிய பின்கள தடுப்பாளர்களைத் தாண்டிச் சென்று கோல் அடிக்கமுடியவில்லை. ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் லீ சுன் - சூ திடீரென்று முன்னேறிச் சென்று ஜேர்மனிய பின்கள வீரர்களைத் தாண்ட முயன்றார். அவர் வெற்றிகரமாக சில பின்கள வீரர்களை தாண்டிச் சென்றார் எனினும் ஜேர்மனிய வீரர் பல்ளக் முறைகேடாக ஆடி அவரை வீழ்த்தினார். இதற்காக ஒரு கட்டுப்பாடற்ற உதை கிடைத்தது. எனினும் தென்கொரியர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்தவில்லை.

இது நடந்து சரியாக 5நிமிடங்கள் கழிந்த நிலையில் - ஆட்டத்தின் 75 ஆவது நிமிடத்தில் ஜேர்மனிய வீரர் மைக்கல் பல்ளக் அணியின் வெற்றி கோலை அடித்தார். இடதுபுற மூலையில் இருந்து தனது சகா தள்ளிய பந்தை ஓங்கி உதைத்தார் பல்ளக். ஆனால் முன்னேறி வந்த தென்கொரிய கோல்காப்பளர் அதனை வீழ்ந்து தடுத்தார். அவரில் பட்டுத் திரும்பிய பந்தை மீண்டும் சடுதியாக, வேகமாக உதைத்து கோல்கம்பங்களுக்குள் புகுத்தினார் பல்ளக். அவர் அடித்த இந்த கோல் அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தது; 10ஆவது தடவையாக ஜேர்மனி அணியை இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற வைத்தது. இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் ஜேர்மனி வென்றது.

இன்று நடக்கும் மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் பிரேஸிலை எதிர்த்து துருக்கி ஆடுகின்றது. மாலை 5.30 மணிக்கு ஜப்பானின் சைற்றமா மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறும். இதில் வெற்றிபெறும் அணி 30ஆம் திகதி நடக்கும் இறுதி ஆட்டத்தில் ஜேர்மனியைச் சந்திக்கும். (ம)



துயரத்தின் ஆழத்தில் தென் கொரிய ரசிகை.

# அட! அப்படியா!!

## சாதனை மீன்





கின்னஸ் சாதனை புரிவதற்கென்று நாம் என்னவெல்லாமோ செய்து கொண்டிருக்கையில சத்த மேயில்லாமல் கின்னஸில் இடம் பிடித்திருக்கின்றது ஒரு மீன்.

ஹொங்கொங் வாசியான ஜாக்கி ஷான் (நடிகர் என்று நீங்கள் நினைத்தால் நாம் பொறுப்பல்ல) வள்ர்க்கும் தங்க மீனே (Gold fish) இந்தச் சாதனையைப் புரிந்துள்ளது. உலகிலேயே மிக நீளமான வளர்ப்பு மீன் என்ற ரீதியில் இந்தத் தங்க மீன் சாதனை படைத்துள்ளது.

40 சென்ரிமீற்றர் நீளம் வரை வளர்ந்துள்ள இந்த மீனுக்கு 'புருஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள டாங்குவான் நகரில் இந்த மீன் தொடர்ந்தும் வளர்ந்து வருகிறது. மீனைப் பார்ப்பதற்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடு கிறார்கள்.

சாதனைகளை மனிதன் மட்டும்தான் செய்யவேண்டும் என்று ஏதாவது விதி இருக்கிறதா என்ன?

## நீளமான தொங்கு பாலம்

உலகிலேயே அதிக நீளமான தொங்கு பாலத்தை அமைக்கும் முயற்சியில் இத்தாலியப் பொறியியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் குறுக்கே ஓடும் மெஸ்சினா ஆற்றின் இருபுறமும் உள்ள இத்தாலியின் இரு நகர்களுக்கும் சிசிலித் தீவுக்கும் இடையே இந்தத் தொங்கு பாலம் அமைக்கப்படவுள்ளது.



இதற்கான ஆரம்பகட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2004ஆம் ஆண்டளவில் கட்டட நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கவும் திட்ட மிடப்பட்டுள்ளது. 6 ஆண்டுகளில் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்திற்கு இலங்கை நாணய மதிப்பில் சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என மதிப் பிடப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் கட்டப்பட்டால் அதுவே உலகின் மிக நீளமான தொங்கு பாலமாக இருக்கும்; எவனாவது ஒரு பின்லேடன் விமானம் மூலம் அதனைத் தகர்க்கும் வரை. ஏனெனில் தற்போது அமெரிக்காவில் உள்ள தொங்கு பாலத்தை தீவிரவாதிகளிடமிருந்து காப்பாற்றவே திணறிக் கொண்டுடிருக்கிறது அமெரிக்க அரசு.

## மீன் சண்டை

ஒன்றில் தாங்களே சண்டைபிடித் துக் கொள்வது அல்லது தனது வளர்ப் புப் பிராணிகளைச் சண்டை பிடிக்க விட்டு வேடிக்கை பார்ப்பது என்பது மனித குலத்திற்கே உரிய (உயரிய.....?) குணமாகிவிட்டது.



சேவல் சண்டை, காளைச் சண்டை, நாய்ச் சண்டை, வாத்துச்சண்டை என்று ஆரம்பித்த இந்தச் சண்டைகள் தற்பொழுது மீன் சண டையில் வந்து நிற்கின்றது.

தாய்லாந்தில் அண்மைக் காலமாக இந்த மீன் சண்டை பிரபல்யம் பெற்று வருகிறது.

சியாமி என்ற இன மீன்கள் இதற்கென உணவூட்டி வளர்க்கப்படுகின்றன. இயல் பாகவே இந்த இன மீன்கள் போர்க் குணம் நிறைந்தவை. ஒரே தொட்டியில் இந்த இன மீன்கள் இரண்டு இருந்தால் உயிர் பிரியும்வரை அவை இரண்டும் தீவிரமாக மோதிக்கொள்ளும்.

இந்த மீன் சண்டையை பார்ப்பதற்கென ஏராளமான மக்கள் கூட்டம் கூடு கின்றது. ஏற்பாட்டாளர்களுக்குப் பணம் கொழிக்கின்றது.

## எப்படி வேண்டுமானாலும் வளைக்க கணனித்திரை



கணனிகள் கண்டுபிடிக் கப்பட்டபோது அளவில் பெரிதாக ஒரு பெரிய அறை முழுவதும் அடைத்துக் கொள் ளக் கூடியதாக இருந்தது. பின்னர் நவீன கண்டுபிடிப்பு கள் மூலமும் அளவில் சிறிய 'சிப்பு'களும் கண்டு பிடிக்கப் பட்ட பிறகும் கணனிகளின் அளவு சிறியதாகிவிட்டது.

அணிந்து கொள்ளக் கூடிய அளவில் கணனிகள் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு கணனித் தொழில் நுட்பத் தில் பல புதுமைகள் இடம் பெறத் தொடங்கி வருகின்றன. இத்தகைய புதுமையான படைப்பில் ஒன்றுதான் புதிய ரக கணனித்திரை; மெல்லி யது. அத்தோடு நாம் எப்படி வேண்டுமானாலும் வளைக் கலாம். 8.4 அங்குலம் நீள மும் 0.4 மில்லி மீட்டர் உயர மும் கொண்ட இந்த கணனித் திரையின் நிறை 20கிராம்தான்.

ஜப்பான் நாட்டின் டொஷிபா நிறுவனம் இத்த கைய அதிநவீன கணனித் திரையை உருவாக்கியுள் ளது. உலகிலேயே பெரிய, அதேநேரத்தில் எப்படி வேண்டுமானாலும் வளைக்ககூடிய திறன் கொண்டதாக இந்த மெல்லிய கணனித்திரை விளங்கு கிறது. இந்த புதிய கணனித்திரை மூலம் கணனியைப் பயன்படுத்துவது மேலும் அதிகரிக்கும். இது தவிர பல்வேறு தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்ப பரிமாற்றங்களுக்கு இது உதவியாக இருக்கும்.

## பொக்கற் ரி.வி



நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பது கையடக்க தொலை பேசியோ, சிறிய பொக்கற் ரேடியோவோ கிடையாது. இது ஒரு பொக் கற் கலர் தொலைக்காட்சி.

2.3அங்குல அகலத் திரையைக் கொண்டுள்ள இது, பற்றரியில் இயங்கும் திறன்படைத்தது. உலகக் கிண்ண உதைபந்தாட் டங்களை பிரிட்டிஷ் ரசி கர்கள் எங்கிருந்தாலும் பார்க்க வசதியாக இலகு வில் எடுத்துச் செல்லக் கூடிய இந்த தொலைக் காட்சியை கஷியோ நிறு வனம் தயாரித்துள்ளது. ஒலியைத் துல்லியமாகக் கேட்பதற்கான 'இயர் போனும்' உண்டு.

பிரிட்டனில் மட்டுமே அறிமுகமாகியுள்ள இந்த ரி.வியின் விலை இந்திய மதிப்பில் 5 ஆயிரத்து 600 ரூபாய்.

தயாரிப்பு: கனிமொழி

# கணனியில் பெரிய்ய்யது....!

அதிக திறனும், சக்தியும் கொண்ட 'சூப்பர்' கணனிகளை உரு வாக்கும் பணியில் அமெரிக்கா முன் னணியில் உள்ளது. தற்போது அமெ ரிக்காவுடன் போட்டி போடும் அள வுக்கு அதிநவீன 'சூப்பர்' கணனி களை ஜப்பான் உருவாக்கி வருகி றது.

கடந்த மார்ச் மாதம் அனைவரும் ஆச்சரியப்படுகிற ஒரு மாபெரும் 'சூப்பர்' கணனியை உருவாக்கி நிறுவியுள்ளது. இந்த 'சூப்பர்' கண னியானது 1957ஆம் ஆண்டு ஒக் ரோபர் மாதம் 4ஆம் திகதி ரஷ்யா, வானத்தில் அனுப்பிய ஸ்புட்னிக் (Sputnik) கோள் பெற்ற பெருமையை யும் முக்கியத்துவத்தையும் பெற் றுள்ளதாக் பலர் கருதுகின்றனர்.

ஸ்புட்னிக் அது அனுப்பப்பட்ட 98 நிமிடங்களில் பூமியை சுற்ற ஆரம் பித்தது. ரஷ்யா அனுப்பிய அந்த ஸ்புட்னிக் அமெரிக்க அரசாங்கத்தை குலுங்க வைத்தது. ரஷ்யாவுக்கு அது பெரிய ராணுவ பலத்தை கொடுத்துவிடும் என்று அமெரிக்கா பயப்படத் தொடங்கியது.

அதை சமாளிப்பதற்காக நாஸா போன்ற அமைப்புகளை உருவாக்கி, அமெரிக்காவும் விண்வெளி ஆராய்ச் சியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கி யது.

இப்போது 'சூப்பர்' கணனி வளர்ச்சி யில் ஜப்பானின் இந்த வெற்றி அமெ ரிக்காவையும் ஆச்சரியப்பட வைத் துள்ளது.

இன்று உலகத்தில் தலைசிறந்த முதல் 20'சூப்பர்' கணனிகளில் இது தான் இப்போது முதலாவது ஆகும்.

அதுமட்டுமல்ல, மீதி 19 கணனி களின் திறமையும் சேர்த்து அடங்கி யுள்ள ஒரே கணனியாக இது அமைந் துள்ளது.


இதை ரஷ்யாவின் ஸ்புட்னிக் போன்று கொம்ப் டெனிக் (Compu tenik) என்று கூட சிலர் பெருமையாகக் கூறு கின்றனர்.

அமெரிக்காவின் மக்கள் தொகை யில் பாதியைக் கொண்ட (12.5 கோடி) ஜப்பான் - அமெரிக்காவின் பரப்பளவில் 25இல் ஒரு பகுதியைக் கொண்ட ஜப்பான் அமெரிக்காவை 'சூப்பர்'கணனி உருவாக்கத்தில் மிஞ்சிவிட்டது.

இந்த 'சூப்பர்'கணனியின் வேகத்தை சொன்னால், நீங்கள் ஆச்சரியப்பட லாம்.

கணனி உலகில் ஒரு வினாடி யில் ஒரு பில்லியன் கணக்குகள் போடும் வேகத்தை ஒரு ஜிகாபிளொப் (Gigaflop) என்று கூறுவார்கள்.

இந்த ஜப்பானின் 'சூப்பர்' கணனி 35,600 கோடி ஜிகாபிளொப் வேகம் கொண்டது அதாவது 35,600x10,00,00,000 (10கோடி) கணக்குகளை 35ஆயி



ரத்து 600 கோடி கணக்குகளை) இந்த கணனி ஒரு வினாடியில் போடும்.

இப்போது அமெரிக்காவில் உள்ள அஸ்கி (Asci) என்ற 'சூப்பர்' கணனிதான் தலைசிறந்தது.

அதன் வேகம் 7,226 ஜிகாபிளாப் ஆகும். மற்றொரு விசேஷம் என்ன வென்றால், அமெரிக்காவில் அஸ்கி 'சூப்பர்' கணனியில் உள்ள சிபியுக் களின் எண்ணிக்கையைவிட இந்த ஜப்பான் 'சூப்பர்' கணனியின் சிபியு எண்ணிக்கை குறைவு.

அமெரிக்காவின் சூப்பர் கணனி யில் 8,192 சிபியு உள்ளது. ஜப்பான் 'சூப்பர்'கணனியில் 5,104 சிபியுதான் உள்ளது.

ஆனால், வேகமும் திறமையும் இதற்குத்தான் அதிகம்.

அமெரிக்காவில் சூப்பர் கணனி யில் உள்ள சிபியு பொதுவாக மார்க் கெட்டில் கிடைக்கக்கூடிய சிபியுக் களை கொண்டு உருவாக்கப்பட்டு. இதை Off-theself Components என்று கூறுவார்கள்.

ஆனால் ஜப்பானின் சூப்பர் கண னியில் பொருத்தப்பட்டுள்ள சிபியு இதற்கென்றே விசேஷமாக தயாரிக் கப்பட்டதாகும்.

மேலும் தொழில்நுட்பத்திலும் இரண்டும் வேறுபடுகிறது.

அமெரிக்கா 'சூப்பர்' கணனி பேர லல் பிராஜசிங் (Parallel Process- ing) என்ற தொழிநுட்பத்தை அடிப் படையாகக் கொண்டது.

அதாவது ஒரு வேலையை சிறு சிறு வேலைகளாக பிரித்து, ஒவ் வொரு சிபியுவும் தனித்தனியாக ஒரே நேரத்திலும் வேலை செய்யும்.

ஆனால், ஜப்பான் கணனி Vector Parallel Processing என்ற தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண் டது.

வெக்டர் புரொசசிங்கில் ஒரு வேலையை முழுமையாக முடித்த பிறகுதான், அந்த முடிவை அடுத்த புரொசசிங்குக்கு அனுப்பும்.

இந்த முறையையும் அதோடு பரலல் புரொசசிங் முறையும் இணைந்து உருவாக்கப்பட்ட தொழில் நுட்பத்தை (Vector Parallel Processing) ஜப் பான் சூப்பர் கணனி பின்பற்றுகிறது.

இந்த சூப்பர் கணனியை உரு வாக்க 5 ஆண்டுகள் சென்றது. ரூ. 1800 கோடி வரை இதற்கு ஜப்பான் செலவழித்துள்ளது.

இது நான்பு மென்னிஸ் கோர்ட் அளவுக்கு பெரியது. இதற்கென்று தனி கட்டடத்தை கட்டியுள்ளார்கள்.

ஜப்பானில் டோக்கியோவுக்கு அருகில் உள்ள நோகோஹாமா என்ற இடத்தில் உள்ள பூமி ஆராய்ச் சிக்கான ஓர் ஆராய்ச்சி நிறுவனத் தில் (Earth Simulator Research and Development Centre) இதை வைத் துள்ளனர்.

இந்த 'சூப்பர்' கணனி என்ன செய்கிறது?

பூமியில் ஏற்படும் மாற்றங்களை யும் இது உருவாக்கிக் காட்டும். ஒரு புயல் எப்படி ஏற்படுகிறது? ஒரு பூகம் பம் எப்படி ஏற்படுகிறது? அதன் பாதிப்பு எப்படி இருக்கும் போன்ற எல்லா விவரங்களையும் இந்த 'சூப் பர்' கணனி படம் போட்டு துல்லிய மாகக் காட்டும்.

பொதுவாக அமெரிக்காவில் உள்ள சூப்பர் கணனிகள் ராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவ தற்காகவே உருவாக்கப்படுகிறது.

ஆனால், இப்போது உருவாக்கப் பட்டுள்ள ஜப்பான் சூப்பர் கம்பியூட் டர், பூமியின் வானிலை போன்ற ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்தப்படு கிறது. இது வரவேற்கத்தக்க ஒரு செய்தியாகும்.

'சூப்பர்' கணனி பற்றிய அதி காரபூர்வமான செய்திகளை சேக ரித்துத் தருவதற்கென்று இரண்டு பல்கலைக்கழகங்கள் (University of Mannheim in German and University of Ternnwssee) கூட்டாகச் செயற படுகின்றன.

இது 'சூப்பர்' கணனிகளின் திற மையை சோதிப்பதற்கு ஓர் அடிப் படையை உருவாக்கியுள்ளது. இதை பெஞ்மார்க் என்று பொதுவாக அழைப்பார்கள்.

இந்த அடிப்டையில் இந்த ஜப் பானின் 'சூப்பர்' கணனியை ஆய்வு செய்தவர்கள் மிகவும் ஆச்சரியப் படுகிறார்கள்.

இது ஜப்பானின் பெரிய வெற்றி என்று கூறுகிறார்கள். வருகிற இரண்டு ஆண்டுகளுக்கு இந்த ஜப் பான் கணனிக்கு இணையாக வேறு கணனி வர முடியாது என்று நிபுணர் கள் கருதுகிறார்கள்.

குறைந்த எண்ணிக்கையில் சிபி யுக்களை கொண்டு, புதிய தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்டு, மிக அதிவேகத்தில் செயற்படுகின்ற இந்த ஜப்பான் சூப்பர் கணனி ஒரு மிகப் பெரிய சாதனைதான்.

கிரே கம்பனிதான் 'சூப்பர்' கணனி உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. இப்போது அந்த கம்பனியை ஜப்பான் வென்றுவிட் டது என்று கூறலாம்.

அதுபோல முப்பது ஆண்டுக ளுக்கு முன்பு ஜப்பான் நாடு அமெ ரிக்காவின் ஐபிஎம் நிறுவனத்தைச் சார்ந்து இருந்தது. இப்போது தானே இதுமாதிரி 'சூப்பர்' கணனி தயாரித் துள்ளது. இது மிகப் பெரிய சாதனை தான். ★

## உ
## இணுவில் கந்தசுவாமி கோயில்
## மஹோற்சவம் - 12ஆம் நாள்
## மஞ்சத்திருவிழா

முருகன் அடியார்களே!

நாளை(2002.06.27) வியாழக்கிழமை மாலை 5.00 மணி பகல் விசேட அபிஷேகம், ஆராதனை நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வருவார். பிற்பகல் 5.00 மணிக்கு சித்திரவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பெற்ற **திருமஞ்சத்தில்** ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராக வீதிவலம் வருவார். முருகன் அடியார்கள் அனைவரும் எம்பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**12ஆம் திருவிழா உபயகாரர்கள்.**

(5194)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 19 - 07 - 1929



மறைவு 07 - 07 - 2001

## அமரர் விநாசித்தம்பி மாணிக்கம்

*(பிள்ளையார் களஞ்சிய உரிமையாளர்)*

திதி: அபரபக்க துதியை

**கண்ணின் இமைபோல் காத்த எம் தெய்வமே!**
**கண்ணீரைப் பரிசாய் கணப்பொழுதில் தந்தீரே!**
**நித்தம் நித்தம் எம்மனதில் நினைவுகள் உமதே - எம்மை**
**நினையாது நீங்கள் பிரிந்ததேனோ?**
**நிஜமாய் நீங்கள் எம்முடன் வாழ்கின்றீர்!**
**ஆலம் விழுது போல் உறவுகள் ஆயிரம் இருந்தென்ன**
**என்றும் அப்பா நீங்கள் ஆதரவாய் இருந்தீர்களே!**

"அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக"
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

*விடத்தற்பளை, மிருசுவில்.* (5122)
மகன்: பரமேஸ்வரன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

### கொடிகாமத்தில் இயங்கி வரும்
# பனை தென்னை வள அ.சங்கத்துக்கு யுத்தத்தால் 38 லட்சம் ரூபா நஷ்டம்

தென்மராட்சி,ஜூன்26

கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்துக்கு 38 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கு அருகில் இருந்த சங்கத்தின் தலைமை அலுவலகம் கடந்த இரண்டு வருடங்களாக படையினரின் பாவனையில் உள்ளதால் கொடிகாமத்தில் தனியார் கட்டடம் ஒன்றில் சங்க அலுவலகம் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

சங்க எல்லைப்பரப்பில் இயங்கிய 24கள்ளுத் தவறணைகளும் முற்றாகச் சேதமடைந்துள்ளபோதிலும் மீளக் குடியமர்ந்த சங்க அங்கத்தவர்களின் நலன் கருதி ஒன்பது கள்ளுத் தவறணைகள் தற்காலிக கொட்டில்களில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மிகக் கூடுதலான(2000) அங்கத்தவர்களைக் கொண்ட சங்கத்தில் தற்போது 420 அங்கத்தவர்களே தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். சங்க எல்லைப் பரப்பின் பல இடங்களில் பனைகள் தறிக்கப்பட்டுவிட்டதால் பல அங்கத்தவர்கள் தொழில்களை மேற்கொள்ள முடியாதுள்ளனர்.

அத்துடன் யுத்தகால வேளையில் படையினரால் எடுத்துச்செல்லப்பட்ட லொறி மீள ஒப்படைக்கப்பட்டபோதிலும் அதனைத் திருத்தி சேவையில் ஈடுபடுத்த எட்டு லட்சம் ரூபாவரை தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் மீளக்குடியமர்ந்த சில பகுதிகளில் கள்ளுத் தவறணைகள் அமைக்க அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதால் அவ்விடங்களில் கள்ளுத் தவறணைகள் அமைக்கப்படாததால் இப்பகுதிகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தமது தொழிலைத் தொடங்கமுடியாதுள்ளது. - என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம-117)

உ
## குப்பிளான்
## திருவருள்மிகு கற்கரைக் கற்பக விநாயகர் திருக்கோயில்
# நூதன இராஜகோபுர கும்பாபிஷேகம்
## 27.06.2002

அடியார்களே!

நிகழும் சித்திரபானு வருஷம் ஆனிமாதம் 13ஆம் நாள் (27.06.2002) வியாழக்கிழமை காலை 9.30மணிமுதல் முற்பகல் 11.18 மணிவரையுமுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில் நூதன இராஜகோபுர கும்பாபிஷேகம் இடம்பெறத் திருவருள் பாலித்துள்ளது.

**25.06.2002 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.45.மணிக்கு விநாயக அனுக்ஞை, கணபதி ஹோமம் (கிரியைகள் ஆரம்பம்)**

26.06.2002 புதன்கிழமை காலை 9.00மணிக்கு ஸ்தூபி ஸ்தாபனம்

27.06.2002 வியாழக்கிழமை காலை 7.00மணிக்கு யாக பூசை, மகாபூர்ணாகுதி நடைபெற்று – காலை 9.30 மணிக்கு இராஜகோபுர கும்பாபிஷேகம்.

நண்பகல் மாகேஸ்வர பூசை நடைபெறும்.

பிரதமகுருமணி ஆகமக் கிரியாஜோதி சிவஸ்ரீ சி.குமாரராஜக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் வருகைதந்து எம்பெருமானை தரிசித்து அருள் பெற்றுய்வீர்களாக!

(5185) **- ஆலய பரிபாலன சபையினர்.**

# யாழ் மக்களின் அபிமானத்தை வென்ற TATA
# இப்பொழுது உங்கள் மண்ணில்.......




LPO 1313 EURO BUS



LPT 613 CAB with HALF LOAD BODY




LPT 1615 CAB with CUMMINS ENGINE



SE 1613 CHASSIS

**எப்பொழுதும் உங்களுக்கான அனைத்து சேவைகளையும் வழங்குவதற்கு டிமோ நிறுவனத்தினர் யாழ் மண்ணில் தயாராக உள்ளனர்.**



LPT 1613 CHASSIS

* யாராலும் வழங்க முடியாத கவர்ச்சிகர விலைக்கழிவு
* ௧௧/௨ வருடத்திற்கான அல்லது ௧,௫0,000 கிலோ மீட்டருக்கு உத்தரவாதம்
* யாழ் மண்ணிலேயே சகல உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொள்ளலாம்
* முதன்முதலாக யாழ் மண்ணில் டிமோ நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தொழிற்சாலை
* நன்கு பயிற்றுவிக்கப்பட்ட இயந்திர தொழில் நுட்பவியலாளர்கள்.

**யாழ் மக்களின் நலன் கருதி விசேட விலைக்கழிவுகள் ஜூலை மாதம் ௩௧ ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடாதீர்கள்!**

யாழ்ப்பாணத்தில்
**Promotors Engineering Company Pvt. Ltd.**
**No. 844 Point Pedro Road,**
**Nallur, Jaffna . Tel : 021-3088**

கொழும்பில்
**Disel & Motor Engineering Co. Ltd.**
**No. 65 Jetawana Road, Colombo - 14.**
**Tel : 449797, 338883, 332809,**
**Mr.Nawaz: 077-742616**
**Fax : 449080 E-mail : dimo@dimolanka.com**

dimo

(C/22687)

உதயன்

## ஆஸி. பொங்கு தமிழில் ஒலித்த மலையகக் குரல்

ஆஸ்திரேலியாவில் கடந்தவார இறுதியில் நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வு பல வழிகளிலும் குறிப்பிடத்தக்கதாகவும், பெருமைப் படக்கூடியதாகவும் அமைந்தது.

மலையகத்தின் குரல் அங்கே தமிழினத்தின் ஒற்றுமைக்கான சங்கநாதமாக ஒலித்தது.

அந்தக் குரலுக்குரியவர் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தனது முற்போக்குச் சிந்தனைகளாலும், செயல்களாலும் மலையக மக்களில் - குறிப்பாக இளம் சந்ததியின் - பெருமதிப்பைப் பெற்று வளர்ந்துவரும் தலைவர்.

வடக்கு - கிழக்கு ஆயுதப்போராட்டம் தொடர்பாக மலையக இளைஞர்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்டபோது சந்திரசேகரனும் தப்பவில்லை. அவரும் சிறைவாசத்தை அனுபவித்தவர்.

கடந்த ஏப்ரல் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய மலையகத் தலைவர்களில் சந்திரசேகரனும் ஒருவர். மலையகத் தலைவர்களுடனான அந்தச் சந்திப்பின்போது வடக்கு - கிழக்கு, மலையகத் தமிழர்களின் ஒற்றுமைக்கும் ஒருமித்த செயற்பாடுகளுக்கும் உறுதியான அடித்தளமிடப்பட்டது.

வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்குமிடையே தொழில்துறையில் சில வேறுபாடுகள் இருந்தாலும், உள்ளத்தாலும், உணர்வாலும் அவர்கள் ஒன்றுபட்டவர்கள்.

அதை சந்திரசேகரன் ஆஸ்திரேலிய பொங்கு தமிழ் நிகழ்வில் நிகழ்த்திய உரை பிரதிபலித்தது. அவர் கூறியதன் சாரம் வருமாறு:-

"வடக்கு - கிழக்குப் போராட்டம் நியாயபூர்வமானது. அது சட்டவிரோதமானது அல்ல; பொழுதுபோக்கிற்காக நடத்தப்பட்டதுமல்ல.

ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்களைக் காவு கொண்ட போராட்டம்; கோடிக்கணக்கான சொத்துகளுக்கு அழிவை ஏற்படுத்திய போராட்டம்; லட்சக்கணக்கான மக்களை நிராதரவாக்கிய போராட்டம். என்றாலும் அந்தப் போராட்டம்தான் தமிழினத்தின் முகவரியைக் காப்பாற்றியிருக்கிறது.

ஆகவே, உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சகோதரர்களே, உலகிற்கு உண்மையை எடுத்தியம்புங்கள். போராட்டம் பயங்கரவாதமல்ல என்பதையும் - போராட்டம் நடைபெற்ற பின்னணியையும் - அதன் பரிமாணத்தையும் - அனைவருக்கும் புரியவையுங்கள். நியாயபூர்வமான உரிமைக்குரலே போராட்டமாகப் பரிணமித்தது என்ற உண்மையை எல்லோரும் விளங்கிக் கொள்ளச் செய்யுங்கள். இவற்றைப் புலிகளாலோ அவர்களுடன் இலங்கையில் உள்ள எங்களாலோ நிறைவாகச் செய்யமுடியாது. உங்களால்தான் முடியும். அதற்கு உணர்வால் ஒன்றுபடுங்கள். அந்த உணர்வை இங்கும், உலகெங்கும் இன்று பரந்துவாழும் தமிழர்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்கச் செய்வதே உலகளாவிய ரீதியில் நடைபெறும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகளின் முக்கிய நோக்கம்.

இங்கே வடக்கு - கிழக்கு, மலையகத் தமிழர்கள் நாம் எல்லோரும் ஒன்றுபட்டிருக்கிறோம். தமிழ் உணர்வும், உரிமை வேட்கையும் எம்மையெல்லாம் ஒன்றிணைத்துள்ளது.

வடக்கு - கிழக்குத் தமிழ் இளைஞர்கள் போல் மலையக இளைஞர்களும் போராட்டம் தொடர்பாக சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் எல்லோரும் சுதந்திர புருஷர்களாக வெளியே வரவேண்டும். நாம் தமிழர்கள் 35 லட்சம்பேரும் உரிமை பெற்று விடுதலை வாழ்வு வாழவேண்டும். அதற்கு உலகெங்கும் வாழும் எங்கள் உறவுகளாகிய உங்களின் அன்பும், ஆதரவும், உணர்வுபூர்வமான பங்களிப்பும் மிகமிக அவசியம் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்".

சந்திரசேகரனின் மேற்படி கருத்தே இலங்கையில் உள்ள தமிழர்கள் அத்தனைபேரின் கருத்துகளாகும்.

### யுத்தத்தால் பாதிக்கப்பட்ட

## [illegible]ப் பகுதிகள் இடிந்து விழுவதால் குடாநாட்டில் உயிராபத்து அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்26

பழைய கட்டடப் பகுதிகள் இடிந்து விழுந்து உயிராபத்துக்களை ஏற்படுத்தும் சம்பவங்கள் குடாநாட்டில் அதிகரித்துவருகின்றன.

யாழ்நகரப் பகுதியில் இந்த மாதத்தில் மட்டும் மதிற்சுவர்கள் இடிந்துவிழுந்த இருவேறு சம்பவங்களில் இரு சிறுவர்கள் பலியாகியுள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி றக்கா வீதியில் கோழிக்கூட்டைச் சீர்ப்படுத்திக்கொண்டு இருந்த மகேஸ்வரதாசன் சுதர்சன் என்ற 13 வயதுச் சிறுவன் கோழிக்கூட்டின் அருகில் இருந்த பழைய மதிற்சுவர் சரிந்துவிழுந்ததிலும் -

கடந்த திங்கட்கிழமை யாழ்.புனித பேதுரு ஆதரவற்ற சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் எஸ்.ரஜீதன் என்ற 14 வயதான சிறுவன் மதிற்சுவர் இடிந்து விழுந்ததிலும் -

இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

யுத்தத்தின் காரணமாகப் பழைய சுவர்கள் மட்டுமன்றி பல கட்டடப்பகுதிகளிலும் விரிசல் மற்றும் வெடிப்புகள் ஏற்பட்டு இருப்பதாகவும் -

அதனையறியாது அந்தக் கட்டடப் பகுதிமீது அழுத்தம் பிரயோகிக்கப்படும்போது அது இடிந்துவிழுந்து அனர்த்தங்கள் ஏற்படுவதாகவும் -

கூறப்படுகிறது.

ஆகவே, பழைய அல்லது சேதமடைந்த கட்டடப்பகுதிகள் குறித்து பெற்றோர்களும், பாடசாலைச் சமூகத்தினரும் விழிப்பாக இருக்கவேண்டுமெனவும் கூறப்படுகிறது. (ஒ-180)




# புலிகளின் பிரதிநிதிகளுக்கும் நியமனக்கடிதம் வழங்கப்படும்

## அம்பாறை கண்காணிப்புக்குழுத் தலைவர் உறுதி

காரைதீவு,ஜூன்26

'அம்பாறை மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் விடுதலைப்புலிகள் நியமித்திருக்கும் பிரதிநிதிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக சமாதான முன்னெடுப்புகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின் தலைவர் பேர்னாட் குணதிலக்க மற்றும் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஆகியோருடன் கலந்தாலோசிக்கப்படும்."

- இவ்வாறு கல்முனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உள்ளூர் ஊடகவியலாளர் மாநாட்டில் விளக்கமளித்த அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் ஸ்வைன் குறிப்பிட்டார்.

கல்முனை ம.'.மூத் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற மாநாட்டில் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களான ஆர். சண்முகநாதன், ஏ. சௌந்தரராஜா, ஏ.ஆர்.ஏ.அசீஸ், மெல்வின் விஜேசேகர ஆகியோர் விளக்கமளித்தனர்.

புலிகள் தரப்பு உறுப்பினர்களுக்கு நியமனக்கடிதம் வழங்கப்படாமையினால் குழு நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடையுமா? என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே தலைவர் ஸ்வைன் மேற்கண்டவாறு கூறினார்.

(ஒ)

## மந்திகை ஆஸ்பத்திரியில் கழிவு எரிக்கும் இயந்திரம்

தென்மராட்சி,ஜூன்26

மந்திகை ஆஸ்பத்திரியில் குப்பைகள் மற்றும் கழிவுகளை எரித்து அழிக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

மேற்படி ஆஸ்பத்திரியில் தொழிற்பட்டுவரும் எம்.எஸ்.எப் நிறுவனத்தினர் ஆறுலட்சம் ரூபா செலவில் இந்த இயந்திரத்தைப் பொருத்தியுள்ளனர்.

ஆஸ்பத்திரியில் தினமும் சேரும் குப்பைகள் மற்றும் சுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கும் மருத்துவக் கழிவுகள் என்பன இதுவரை காலமும் ஆஸ்பத்திரி வளவில் வைத்து எரிக்கப்பட்டு வந்தன. இவ்வாறு அவற்றை எரிக்கும்போது ஏற்படும் புகை சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் எனக் கருதியதையடுத்து எம்.எஸ். எப்.நிறுவனம் இந்த இயந்திரத்தைப் பொருத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## கடற்றொழில் சங்க வளாகத்தில் 'பிளாஸ்ரிக்' படகுகள் திருத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

ஆழ்கடல் மீன்பிடித்தல் அனுமதிக்கப்பட்டபின்னர் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க அலுவலக வளாகத்தில் 'பிளாஸ்ரிக்' படகுகளை திருத்தியமைக்கும் வேலைகள் நடைபெற்றுவருவதாகவும் -

ஆகவே, கடற்றொழிலாளர்கள் அவர்களது சேதமடைந்த படகுகளைத் திருத்தவேண்டுமாயின் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் -

சங்கத் தலைவர் அ.டெனிஸ்ராஜா கேட்டுள்ளார்.

யுத்தச் சூழ்நிலை நிலவிய காலத்தில் உரிமையாளர்களால் சங்க வளாகத்தில் கைவிட்டுச் செல்லப்பட்ட படகுகளை உரிமையாளர்கள் தற்போது அடையாளம் காட்டி எடுத்துச் செல்வதாகவும் -

அவ்வாறு எடுத்துச் செல்லாதவர்கள் சங்கத்தை அணுகி தமது படகுகளை அடையாளம் காட்டிப் பொறுப்பேற்கும்படியும் -

மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-51)

### நாளை

ஆனி 13
வியாழக்கிழமை
(27.06.2002)
திதி :திருதியை
பின்னிரவு 3.58 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
நண்பகல் 12.40 வரை.
சுபநேரம் : 7.25 - 8.55
ராகுகாலம் : 1.25 - 2.55
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சந்தர்ப்பங்கள் தேடி வருவதில்லை. சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள் [illegible] முன்னேற்றம் காண்கிறார்கள்.

## பளையில் தென்னைகளுக்கு 'ஈக்கில் எரிபந்தம்' பாதிப்பு

வடமராட்சிகிழக்கு,ஜூன்26

பளைப்பிரதேசத்தில் உள்ள தென்னைகள் 'ஈக்கில் எரிபந்தம்' நோயினால் பாதிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

யுத்தத்தினால் பெருமளவு தென்னைகள் அழிவுற்ற நிலையிலும், எஞ்சிய சில தென்னைகளும் இந்த நோயின் தாக்கத்தால் பாதிப்படைந்து வருவதையிட்டும் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் கவலையடைந்துள்ளார்கள்.

அதேவேளை -

யுத்த நேரத்தில் அழிக்கப்பட்டு நிலத்தில் காணப்படும் தென்னங்குற்றிகளிலிருந்து, பெருகும் வண்டுகள், புழுக்களினாலும் தென்னைகளுக்கு நோய்கள் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக தென்னை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்களினால் எச்சரிக்கப்படுகிறது.

(ஒ-182)

## சமுர்த்தி, கிராம அலுவலர்களுக்கு தென்மராட்சியில் கலந்துரையாடல்

### அரசியற்றுறை ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஜூன்26

தென்மராட்சி பிரதேசத்துக்குட்பட்ட கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிக்குட்பட்ட வணிகர் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள், விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள், செயலாளர்கள், தனியார் போக்குவரத்துக் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2:00 மணிக்கு தென்மராட்சி அரசியல்துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரு கலந்துரையாடல்களிலும் சம்பந்தப்பட்ட சகலரையும் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் கேட்டுள்ளார். (ஐ)

### பொருள்கள் சோதனையிடப்படும்

## முகமாலை கொட்டகைகளுக்கு விரைவில் மின் இணைப்புகள்

தென்மராட்சி,ஜூன்26

முகமாலையில் உள்ள சோதனை நிலைய கொட்டகைகளுக்கு விரைவில் மின் இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.


கொட்டகைகளுக்கான மின் இணைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, மின் கம்பங்களில் மின் கம்பிகள் பொருத்தும் பணியில் இலங்கை மின்சாரசபையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி சோதனை நிலையத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஜெனரேற்றர் இந்தவார இறுதிக்குள் வந்து சேர்ந்துவிடும் என்றும் -

அதனைத் தொடர்ந்து மின் இணைப்பு வழங்கப்படுமெனவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# 31ஆம் நாள் நினைவுக் கண்ணீர்

பூலோக மலர்வு
26 ◊ 02 ◊ 1950



பரலோக நுழைவு
27 ◊ 05 ◊ 2002

**அமரர் கதிரவேலு செல்வராசா** (மணியம)

*எனக் கென ஒருவனாய் இருந்தாய்*
*எண்ணிலா நிம்மதி தந்தாய்*
*எண்ணி முடிக்குமுன் முகம் மறைந்தாய்*
*என்று காண்பேன் உன்திரு வதனம்...?*
*எண்ணியே தினமும் ஏங்குகின்றேன்;*
*கண்ணீரே இனி என் வாழ்வு!*

*சங்குவேலி, மானிப்பாய்.* (5073) மனைவி, குடும்பத்தினர்.

# 15ஆம் வருட அன்பின் நினைவு

அன்னை மடியில்
1920 07 15



ஆண்டவன் அடியில்
1987 07 12

**அமரர் செ.திருநாவுக்கரசு**

*(சமாதான நீதிவான், முன்னாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னைய உடுப்பிட்டி கிராம சபைத் தலைவர்)*

திதி: 2002. 06. 26

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்டு
இன்றுடன் ஆண்டுகள் பதினைந்து சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாசவிளக்கின் ஒளி
அணையாத தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

உங்கள்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கரணவாய் மத்தி, கரவெட்டி.* (5149)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
07 ◊ 07 ◊ 1931



இறையடி நிழலில்
29 ◊ 05 ◊ 2002

**திருமதி சரஸ்வதி இரத்தினம்**

*(ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை)*

அச்செழுவைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக் கட்டுவன் வடக்கை வசிப்பிடமாகவும், தற்காலிகமாக வவுனியாவில் வசித்தவருமான எமது தாயார் இறைபதம் எய்திய செய்திகேட்டும், உடன்வந்து பல வழிகளிலும் உதவிகள் செய்து ஆறுதல் கூறியும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும், இறுதியாத்திரையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளைமறுதினம் (28.06.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது வவுனியா பூங்கா வீதி (இ.மி.ச.) இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.*
தகவல்:-
இ.கணேசலிங்கம் J.P. (மகன்)
(5190) (C.I.C.ltd, கொழும்பு) 075 - 341914 077-725625

## பிரதி அமைச்சரின் கார் கொள்ளை!

கொழும்பு,ஜூன்26

வீடமைப்புப் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத்தின் கார் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் குறித்து வத்தளைப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். நேற்று முன்தினம் வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

பிரதி அமைச்சரின் உத்தியோக பூர்வ கார் கடந்த ஞாயிறன்று நள்ளிரவு வத்தளை அவிவத்தைக்குச் சென்றிருந்தபோது கடத்தப்பட்டது. அச்சமயம் பிரதி அமைச்சர் காரில் இருக்கவில்லை. காரின் பெறுமதி 20 லட்சம் ரூபா என்று மதிப்படப்படுகிறது. சாரதி காரை அவரிவத்தையில் நிறுத்தியிருந்தபொழுது வான் ஒன்றில் வந்த அறுவர் துப்பாக்கியைக் காட்டி சாரதியைப் பயமுறுத்தியுள்ளனர். பின்னர் சாரதியை வெளியே இழுத்துத் தள்ளிவிட்டுக் காரைக் கடத்தினர். பின்னர் சாரதி வத்தளைப் பொலஸில் முறையிட்டிருக்கிறார். (ஐ)

## வீதி திருத்தம்

வலி.வடக்கு பிரதேச சபையினால் அளவெட்டி இக்கிராணை வீதி திருததம் செய்யப்படவுள்ளது.

விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் மேற்படி வீதி நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமையால் விவசாயிகள் போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்தனர். (எ-86)

## நன்னீர் கிணறு முகாமுக்குள்

வரணி,ஜூன்26

வரணி அம்மா கடையடி மக்கள் பயன்படுத்தி வந்த நன்னீர்க் கிணறு இருந்த பகுதிவரை படையினரின் முகாம் விஸ்தரிக்கப்பட்டதால் மக்கள் தமது குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்ய சிரமப்படுவதாகக் கூறப்படுகிறது.

இப்படை முகாம் பகுதியில் தனியார் கடை மற்றும் 20 வீடுகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-13-ரி)

உ
*சிவமயம்*
*ஸ்ரீகற்பக விநாயகர் துணை*

# ஆத்மசாந்திக்கிரியை அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருஷம் ஆனிமாதம் 5ஆம் நாள் (19.06.2002) புதன்கிழமை பகல் இறைவனடி சேர்ந்த கும்பிட்டான்புலம் கற்பகவிநாயகர் ஆலய அர்ச்சகரும் எமது குடும்பத்தலைவருமாகிய

**பிரம்மஸ்ரீ மா.குமாரசுவாமி சர்மா**

*அவர்களின் ஆன்மாப்பேற்றுக் கிரியைகள் பின்வரும் நாள்களில் நடைபெறவுள்ளன.*

ஆனிமாதம் 14ஆம் நாள் (28.06.2002) வெள்ளி - தசாகம்
ஆனிமாதம் 15ஆம் நாள் (29.06.2002) சனி - சுத்திபுண்ணியாகம்
ஆனிமாதம் 16ஆம் நாள் (30.06.2002) ஞாயிறு - சபிண்டீகரணம்
ஆனிமாதம்17ஆம் நாள் (01.07.2002) திங்கள் - கிருகயக்ஞம் (மகியபோசனம்)

*மேற்படி கிரியைகளில் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.*

கிரியைகளை பிரம்மஸ்ரீ ஐ.ஞானம் உபாத்தியாயர் நடத்திவைப்பார்.

*தகவல்:- கு.வித்தியானந்தசர்மா (மகன்)*
*கும்பிட்டான்புலம், வரணி வடக்கு, வரணி.* (8186)
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
24 ◆ 12 ◆ 1942



ஆண்டவனின் அடியில்
07 ◆ 07 ◆ 2001

**அமரர் சின்னையா கனகரத்தினம்**

*(உரிமையாளர், கலா கபே, சுன்னாகம்)*
*திதி:- துதியை (26. 06. 2002)*

அன்புடனே எமை வளர்த்த அப்பாவே!
அப்பா என்றழைக்க எமக்கிங்கே யாருமில்லை!
ஆறமுடியாத் துயரில் நாமிங்கே தவிக்கின்றோம்
ஆறுதல் தந்திடுவீர் நாமிங்கே வாழ்ந்திட.....!
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.* (5158)
என்றும் உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

FREE

அனைத்து ப்ரஸியா
50g கிறீமுடன்,
ரூ. 20.00 பெறுமதியான
சினால் சோப் இலவசம்




மரமஞ்சல் - சருமத்தை பொலிவாக்குவதுடன் மென்மையாகவும், அழகாகவும் செய்கிறது.
முருகல் மரம் வெண்ணெய் - சருமத்தில் ஏற்படும் காயங்கள், வெடிப்புகள் என்பவற்றை குணமாக்குவதுடன், சருமத்தை மிருதுவாக்குகிறது.
வெண் சந்தணம் - மேனியை குளிர்ச்சியாக்கி, சரும நோய்களிலிருந்தும் பாதுகாக்கிறது.

PHARMCO
MARKETING SERVICES (PVT) LTD

# நினைவலைகள்

## முதலாம் ஆண்டு நினைவில்... ஏழாம் ஆண்டு நினைவில்...



அமரர்
**திருமதி வேலாயுதபிள்ளை பராசக்தி**

மலர்வு: 17-07-1940
உதிர்வு: 26-06-2001

செப்புகின்ற வீர அண்ணன்
புலிப்படையின் தலைவன்
சிறப்பாகப் படை நகர்த்த
சந்தனளோ மகவை
அன்பிற்கு இருப்பிடமாம்
எங்கள் அம்மா சக்தி
அகிலாண்ட நாயகியே
எண்ணுகின்றோம் தாயே!

(வரணி)

*இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.*



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத்தளபதி
**லெப்.கேணல் கில்மன் / காந்தன்**
**(வேலாயுதபிள்ளை - சிவகுமார்)**

தாயின் மடியில்: 21-06-1970
காயக மண்ணில்: 28-06-1995

எம் தலைநகரின் வாசலில்
எமது கொடி அசைந்திடும்
என்ற உறுதியோடு
எம் தலைவரின் அணியில்
வித்தான உன் உடலால்
வியாபிக்கும் எம் தமிழீழம்
மலருமடா உன் கனவு
மறந்திடோம் உனது பணி!

உங்கள் நினைவுடன் வாழும்,
குடும்பத்தினர்.

*சந்தையடி, வட்டக்கச்சி.* (5095)

# மனிதர்கள் இடையே கபடத்தை வளர்க்கும் கல்விமுறை தேவையா?

உலகமகா யுத்தங்கள் ஏற்படுத்திய அழிவைவிட பாரிய அழிவுகள் மேற்குலக தொழில்சார் கல்விகளினூடாக ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. மேற்குலகால் தொடர்ந்தும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பாரிய கலாசாரச் சிதைவுகளுக்கு எதிராக முகங்கொடுத்து வாழ்ந்துகொண்டிருக்கும் முதியவர்களுக்கு மட்டும் இது புலனாகும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில் புலன் வழி சென்று சீரழிந்தவர்கள் முதியவர்களென்றாலும் சரி, இளையவர்களென்றாலும் சரி, இன்றைய பாடசாலை, பல்கலைக்கழக படிப்புப் படித்தவர்களென்றாலும் சரி, படிக்காதவர்களாயிருந்தாலும் சரி புரிந்துகொள்வது கடினம். அவர்கள் அடித்துச் செல்கின்ற வெள்ளத்தோடு இழுபட்டுச்செல்கின்றவர்களாகையால் இவற்றை அறிய விரும்பமாட்டார்கள். யுத்தங்கள் பொருளழிவுகளை, உயிரிழப்புகளை அந்தந்தப் பிரதேசத்தில் அன்றைய மக்களின் உளவியல் பாதிப்புக்களை மட்டுமே ஏற்படுத்தியது. யுத்தம் நின்றதும் அவை நின்றுவிட்டது. ஆனால், இன்றைய மேற்குலக தொழில்சார் படிப்புகள் உலகம் முழுவதிலுமுள்ள இளைஞர்களின் உள்ளங்களில் நஞ்சை

## சிந்தனைத்தொடர்-5

விதைக்கின்றன. யேசுநாதர் அயலானை நேசிக்கவே சொன்னார். ஞானிகள் தன்னுயிரைப் போல் மன்னுயிரையும் நேசிக்கச் சொன்னார்கள். ஆனால், யேசுநாதரின் நாமத்தை உச்சரிக்கும் மேற்குலகம், தமது தொழில்சார் படிப்புகள் மூலம் அன்பின் விரோதியான கபடத்தையல்லவா எல்லோர் உள்ளத்திலும் விதைக்கிறது. பணப்பேயிற்கு, பதவிக்கு அடிமைப்பட்டவர்கள் அந்தக் கபடத்திற்கு அடிமைப்பட்டு முன்னேற்றம் என்ற பெயரில் அழிகிறார்கள். அபிவிருத்தி என்ற பெயரில் மக்களை மட்டுமல்ல, இயற்கை அன்னையை, பூமித்தாயை அழிக்கிறார்கள். மக்கள் விழித்துக்கொள்ளாவிட்டால் வேதனையான முடிவுதான். மேற்குலகம் விதைக்கும் நச்சு விதைகள் விருட்சமாகி, குடும்பங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அலுவலகங்கள், தொழிற்கூடங்கள், நாடாளுமன்றங்கள், வழிபாட்டிடங்கள், நாடுகள் எங்கும் மனிதநேயத்தை நிர்மூலமாக்கிவிட்டது. கபடம் மனித இனத்தை விழுங்கிவிட்டது. மனிதனின் அன்றாட வாழ்வின் இயல்பு நிலையாகிவிட்டது. மனித உயர் குண நலன்கள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டன. கடமைகளால் கட்டியெழுப்பப்பட்ட நம்மவரது வாழ்க்கையில் கபடம், உரிமைக்கோஷங்கள் தலைவிரித்துத் தாண்டவமாடுவதால் எங்கும் போராட்டமென்ற

## அழிவின் விளிம்பில் நாம்.....

பெயரில் உடமை அழிப்பு வேலைகள், கொலைகள். எல்லோரிடத்திலும் பரஸ்பர நம்பிக்கைகள் அழிந்துவிட்டன. லஞ்ச ஊழல்கள், மோசடிகள், கள்ளச் சந்தை வியாபாரம், கலப்படம், பிற்கதவு வேலைகள், விவாகரத்து, நாட்டையழிக்கும் நாசகாரச் செயல்கள் துரிதமாகப் பெருகுகிறது. கபடத்தை அங்கீகரித்துவிட்டு, இதன் வாரிசுகளான அனைத்துக் குற்றச் செயல்களையும் ஒழிப்பதற்குப் பொலீஸார், சுங்க அதிகாரிகள், கணக்காய்வாளர், விலைக் கட்டுப்பாட்டு, தரக்கட்டுப்பாட்டு அதிகாரிகள்..... போன்றவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் மட்டும் வானத்திலிருந்து குதித்தவர்களா? இந்தக் குப்பைகளைச் சந்தித்து வந்தவர்கள் தானே. அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட காரணத்திற்காக மட்டும் இவர்கள்மீது அக்குப்பைகள் படாமலிருந்திருக்குமா? எவ்வாறு தீமைகள் ஒழியும்? மனிதனுள்ளத்தில் நிறைவு இல்லை. அதனால் அமைதி இழக்கப்பட்டுவிட்டது. இதனால் மதுவிற்கு, இன்னோரன்ன தீய பொருள்களுக்கு அடிமையாகி, தற்கொலையைக் கூடத் தழுவிக்கொள்கிறான். மத குருமார்களென்ன இவற்றிற்கு விதிவிலக்கா? மதங்களின் உட்பொருளை அறியமுடியாத இழிநிலை. இதனால் இவர்களாலேயே மக்கள் குழப்பப்படுகிறார்கள். ஆன்மீகம் செயலற்றுவிட்டது. மதங்கள் கேலிக்கூத்தாகிவிட்டன. ஆனால் மதமாற்றங்கள் போன்ற வருவாய் தரும் வேலைகள் மட்டும் அடிக்கடி நிகழ்கின்றன. திருமணங்கள்கூட ஆதாயத்தை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றன, பிறக்கும் குழந்தைகள் மட்டும் எவ்வாறு உயர் குணநலன்கள் உடையவராக வரமுடியும்? எவ்வாறு அமைதி கிட்டும்? வாழ்க்கை என்ன மாயாஜால (magic) விளையாட்டா? தீமைகளைப் போற்றுவதனாலேயே, தீயவர்களைப் பாராட்டுவதனாலேயே தீமைகள் பெருகுகின்றன. அழிவுகள் இடம்பெறுகின்றன. மனித இனத்தைத் துன்பம் வாட்டி வதைக்கிறது என்பதைக்கூடத் தெரியாத, தெரிவிக்காத படிப்புகள் ஒரு படிப்பா? இவற்றைப் போற்றுகிறவன், மனிதனா? ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கத் தெரிந்தவன், பணம் சம்பாதிக்கச் செய்பவன்தான் இன்று புத்திஜீவிகளா?

பெருகிவரும் சனத்தொகைக்கு வேலைவாய்ப்பு வழங்க தொழில்படிப்பாம், தொழில் சட்டங்களாம், தொழில் கூடங்களில் வேலைசெய்பவர்களிடம் இருந்து அதிக வேலையை வெளிக்கொண்டுவர அவர்களது அக அமைதி குலைக்கப்படுகிறது. ஆசை ஊட்டப்படுகின்றது. இலாபம் ஊட்டக்கூடிய வகையில் கூடிய வேலைசெய்பவர்களுக்கு சம்பள அதிகரிப்பு, பதவி உயர்வு, வசதிகள் அதிகரிப்பு என்று பிரசித்தப்படுத்தப்படுகின்றன. இதனால் மனிதன் இயந்திரம்போல் செயற்பட ஆரம்பிக்கின்றான். குடும்ப நலனில் கூட அக்கறை குறைகிறது. எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்காவிடில் மனச்சோர்வு அடைகிறான். வெளிப்படுத்திய ஆற்றலைக்கூட குறைத்துக்கொள்கின்றான். கடுமையாக வேலைசெய்துதான் என்னபலன் என்ற கேள்வி அவன் உள்ளத்தில் ஏற்படுகின்றது. அடுத்தவர்களையும் குழப்புகின்றான். ஆர்ப்பாட்டங்கள் இதனைத் தொடர்ந்து கவலைகள். அதுதான் அவன் கண்ட மிச்சம்.

உற்பத்திசெய்யப்பட்ட பொருள்களை எப்படி விற்று காசாக்குவது என்ற கவலை உற்பத்தியாளர்களுக்கு ஏற்படுகிறது. சந்தைப்படுத்தல் படிப்பு இதற்கு கைகொடுக்கிறது. இப்பொருள்கள்மீது மக்களுக்கு ஆசையை ஏற்படுத்துவதற்கு கபடமான வழிகளைப் பயன்படுத்துகின்றான். சுமார் 45 வருடங்களுக்கு முன்னர் தேநீர், ஓவல்ரின் போன்ற பானங்கள் பாடசாலைகளிலும் சந்தை போன்ற பொது இடங்களிலும் இலவசமாகக் கொடுக்கப்பட்டு ஆசை ஊட்டப்பட்டது. இன்று நாள் ஒன்றுக்கு மூன்று தடவைகளுக்குக் குறையாமல் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்லாத தேநீர் பானம் பருகும் நிலைக்கு மனிதன் அதற்கு அடிமையாகிவிட்டான். ஆரோக்கியத்தைக் கெடுக்கும் பொருள்களுக்குக் கவர்ச்சியான தோற்றம், உருசி அளிக்கப்படுகின்றது. ரி.வி., சுவரொட்டிகள்.... ஊடாக ஆசையைத் தூண்டும் விளம்பரங்கள்..., ஏன் ஒலிபெருக்கி பூட்டப்பட்டு பிரசாரம் செய்துகொண்டு ஆரோக்கியத்துக்கு உகந்ததல்லாத உட்கொள்ளும் பண்டங்கள் வட்டு வாசலைக் கடந்து செல்லும் பொழுது சிறுவர்கள் தூண்டப்பட்டு பெற்றோரிடம் பணம் கேட்கும் பொழுது வறிய குடும்பங்களில் மனத்தாங்கல்கள் ஏற்படுகின்றன. அமைதிகுலைகிறது. ஆரோக்கியமுள்ள பொருள்கள் பின்தள்ளப்படுகின்றன. உற்பத்தி குறைகிறது. சத்துள்ள புளுக்கொடியல், பனாட்டு, குரக்கன்... போன்றவைகளுக்கு ஏதும் விளம்பரம் உண்டா?

**ஆத்மசொரூபன்**

ஆனால் அழிவுப் பொருள்களான களடோஸ், சிகரட், மது... போன்றவைகளுக்குத்தான் விளம்பரம். 'நட்பை வளர்க்க சிகரட் பரிமாறுக' என்பன போன்ற [illegible] கள் மக்களை [illegible] வதாகவில்லையா? [illegible] மக்கள் மடையர்கள் [illegible]. [illegible] இத்தகைய அழிவுப்பொருள் [illegible] பரங்களுக்கு புத்திஜீவிகள், கல்விமான்கள், பேராசிரியர்கள், மதகுருமார்கள்... என்று சொல்லிக் கொள்பவர்கள் ஆட்சேபனை தெரிவித்தார்களா? யார் அழிந்தால் எனக்கென்ன என்ற இழிநிலை. இந்நிலையில் சுகமளிக்கும் கூட்டங்கள் மூலம் விடுதலை, சுகம் கிட்டிவிடுமா என்ன? இன்றைய எல்லா உற்பத்திப் பொருள்களும் அடிக்கடி கவர்ச்சியான தோற்றத்தை, மாற்றத்தைப் பெறுகின்றன. design pattern மாறுகின்றன. முன்னரைப் போல் நீண்ட நாள்கள் உழைப்பதில்லை. இதனால் வீட்டிலே பொருள்கள் குவிகின்றன; பணம் விரயமாகிறது. இவற்றை ஈடுசெய்ய ஓய்வில்லாது பணம் தேடல், நிறைவு இல்லை, அக அமைதி குலைகிறது, இரவில் போதையூட்டும் பொருள்களுக்கு அடிமையாகிவிடுகிறான். காலையிலே வழிபாட்டிடங்களுக்கு விஜயம். சிவனோ, இயேசுவோ, அல்லாவோ அமைதியைக் கொடுத்து விடுவார்களா? பொய், களவு, கள், காமம், கொலை இவற்றை எந்த தீர்க்கதரிசி கள் அனுமதித்திருக்கிறார்கள். இந்த மனித உயர் குணநலன்கள் மனித குலத்திற்குப் பொதுவானவை. இவற்றையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு வழிபாட்டிடங்களில் என்ன வழிபாடு? சிவனோ, யேசுவோ, அல்லாவோ... மனிதனுக்கு அக அமைதியை, விடுதலையைத் தருவார்களா?

*"தெய்வம் தொழாள், கொழுநற*
*றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை"*

- என்று குறள் கூறுகிறது. கடவுளை வழிபடாவிட்டாலும் கணவனை வழிபடுபவள் மழை பெய் என்றால் பெய்யுமாம் என்றல்லவா குறள் கூறுகிறது. ஆயக்காரன், பரிசேயர் ஆகியவர்களுடைய வழிபாட்டைப் பற்றி யேசுநாதர் என்ன கூறினார். தன்னைப் பெரிதாக எண்ணித் தம்பட்டம் அடிப்பவனின் வழிபாட்டை அல்ல தன்னுடைய தவறுகளை உணர்ந்து வருந்துபவனின் வழிபாட்டைத்தான் கடவுள் ஏற்றுக்கொள்கிறார் என்றல்லவா கூறினார். எனவே, பிறரை அழிக்கும் கபடம் எவ்வாறு விடுதலையை அளிக்கும். அயலவனை நேசிப்பதற்கு எவையெல்லாம் தடையாயிருக்கிறதோ அவற்றை நீக்கமுயலாதவரைக்கும் வழிபாடு கேலிக்கூத்தே. இதை ஏற்படுத்துவதே மதகுருமார்களின் பணியாக அமைய வேண்டுமே தவிர, பிரிவினைகளையோ மதமாற்றங்களையோ அல்ல. ☆

---


# நீதிபிறழா ஆட்சிக்கு உறுதுணையான பண்டைத் தமிழ்ச் சான்றோர்

**"பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களும் பரந்துபட்ட அறந்தழுவிய செயற்பாடுகளும்" என்ற தலைப்பில் வெளியாகிவரும் தொடர்கட்டுரையின் இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

அரசாட்சி சிறந்து விளங்க வேண்டுமாயின் அரசுக்குச் சான்றோர் துணை வேண்டும். இன்னது செய்தால் இன்னது விளையும் என முன்னதாக அறியவல்லோரே அறிவுடைச் சான்றோராவர். அறிவு முதலியவற்றால் தம்மினும் பெரியோர், தமக்குச் சிறந்த நண்பராகுமாறு நடத்தல் அரசற்குரிய எல்லா வல்லமையிலும் சிறந்ததாகும்.

*'தெரிந்த இனத்தொடு தேர்ந்*
*தெண்ணிச் செய்வார்க்கு*
*அரும்பொருள் யா தொன்றும்*
*இல்"* (குறள்)

அறிஞர்களோடு ஆராய்ந்து தாமும் எண்ணிப்பார்த்து ஒரு தொழிலைச்



செய்பவர்க்கு அடைதற்கரிய பொருள் யாதொன்றும் இல்லை. வரி செலுத்த முடியாத குடிகளை வருத்தி, அவர் தம் வாழ்வை அழித்தலைவிட, அவர்களுக்கு வசதிகளை வழங்கித் தழைத்தோங்கியபின் பன்மடங்கு வரி பெறுதல் அறிவுடைய செயலாகும். பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் வேந்தனிடம் புலவர் ஒருவர் இவ்வுண்மையை அறிவுறுத்தியுள்ளார். இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கினார். யானை ஒன்று தனியே நெல் வயலில் புகுந்து உண்ணத் தொடங்குமாயின், அனைத்தும் அழியும். வாயில் புகும் உணவைவிட காலால் மிதிப்பதால் பல மடங்கு உணவுப் பொருள் அழியும். ஆனால், வயலில் உள்ள நெல்லை முற்றவிட்டு அரிசியாக்கினால் பல நாள்களுக்கு உணவளிக்கப் போதுமானதாகும். அறிவுடைய வேந்தன் அழிவு வேலைகளில் ஈடுபடாமல் நெறியறிந்து குடிகளை ஊக்குவித்தால் நாடும் நலம்பெறும் அரசும் சிறக்குமென்றார்.

'செவி கைப்பச் சொற் பொறுக்கும்', பண்பு ஒரு மாண்பு என்பது வள்ளுவர் வாய்மொழி. புலவர் ஒருவர் தன்னை அணுகி 'நீ அறிவுடையவனாக இரு, மெல்லியனாய் இராதே' என்று கூறியதைப் பொறுமையோடு கேட்டுப் பயன்பெற்ற மாண்பு பாண்டியன் அறிவுடை நம்பியிடமிருந்தது பாராட்டத்தக்கதாகும். பெயரும் பொருத்தமானதே. பெயரளவில் அன்றி, அறிவான் வாழ்விலும் அவன்பாடிய பாட்டு ஒன்று மேலெழுந்து நிற்பதைக் காண்கின்றோம். அவன் குழந்தைகளையே பெருஞ்செல்வமாக மதித்தான். மக்கட்பேறு இல்லாத வாழ்வு வாழ்ந்தும் பயனற்றது என்றான்.

*'மயக்குறு மக்களை இல்*
*லோர்க்குப்*
*பயக்குறை இல்லைத் தாம்*
*வாழும் நாளே'* (புறம்)

என்பது அப்பாண்டியன் பாடலின் இறுதி அடிகளாகும். அறிவுடை நம்பியின் மனம் தன்னலம் அற்று

**நாக.சண்முகநாதபிள்ளை**

விரிந்து வீடுதோறும் குழந்தைகளின் குறுகுறு நடையும், சிறுகை நீட்டலும் பிறவும் நிறைந்து இன்பம் நிலவ வேண்டும் என அவ்வேந்தன் விரும்பினான். அவன் உள்ளம் பொது நலம் விரும்பிய உள்ளம். இவன் சான்றாண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினான். இவ்வாறே சோழன் நெடுங்கிள்ளி என்ற அரசனுக்கு. கோவூர்க்கிழார் என்ற புலவர் இடித்துரைத்தார். 'உன் நாட்டுக்குழந்தைகள் பாலின்றி அலறுகின்றனவே! நீ இங்கிருத்தல் இன்னாது' எனக் கடிந்தார்.

அறிவுடை நம்பி பாண்டிய குலத்தைந் சேர்ந்தவன். அவனுக்கு அரசியல் அறிவு புகட்டிய புலவர் 'சோழனுக்கு நண்பர். கோப்பெரும் சோழன் வடக்கிருந்தபோது அவனோடு உயிர் நீத்தவர். 'சோழனின் நண்பர் தமக்கு

**இக்கட்டுரை பழந்தமிழ் இலக்கியங்களோடு ஒரு பயில் பண்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். திறமான புலமைகளை பண்டைய இலக்கியங்களில் தேடிச் சுவைக்கும் திறன் அருகிவரும் தற்காலக் கல்வியியற் போக்கில் ஓர் உயர்வான மீட்டலை இவை கொண்டுவரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.**

அறிவுறுத்த வந்தாரே' என்று பாண்டியன் வெறுக்கவில்லை. நம் 'நண்பன் சோழனைப் புகழாது பாண்டியனைப் புகழ்வோமா' எனப் புலவரும் நினைத்தாரல்லர். குறுகிய நாட்டுப் பற்றுக் கடந்து, அன்பு விளங்கும் அரசியல் அன்று தமிழகத்தில் நிலவியது. பிசிராந்தையர் பாண்டி நாட்டில் வாழ்ந்தவர். தான் நரையில்லாமல் வாழ்வதற்குக் காரணம் 'என்னாட்டை ஆளும் பாண்டிய வேந்தன், துன்பம் இழைக்காது இனிது காத்து வருவதே ஆகும்' என்று சோழநாட்டார் இடையே எடுத்துரைத்தார். பாண்டியன் செவியிற் படுமாறு முகமனாகக் கூறவில்லை. எனவே,அவரவர் உள்ளம் அவ்வப்போது மகிழ்வுறுவதற்காக ஆகாங்கே புகழ்ந்து பெறுவன பெற்று வாழவிரும்பும் தன்னலம் பண்டைத்தமிழ்ச் சான்றோரிடம் இருக்கவில்லை. உயர்ந்த நோக்கம் கொண்டு விழுமிய வாழ்வு வாழ்ந்த சான்றோரை மன்னர்கள் மதித்தார்கள் என்ற ஒன்றே பழந்தமிழ்ப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் விளக்கும் சான்றாக உள்ளன.

பிசிராந்தையர் தமது நரையின்மைக்குக் காரணமாகப் பாடிய பாட்டை அரசியல் நாகரிகமே அல்லாமல் குடும்பமும் ஊரும் நாகரிகமாக விளங்கிய தன்மையும் காணப்படுகின்றது.

*'யாண்டுபல ஆக நரைஇல*
*ஆகுதல்*
*யாங்(கு) ஆகியர்என வினவுதிர்*
*ஆயின்*
*மாண்ட என் மனைவியொடு*
*மக்களும் நிரம்பினர்;*
*யான் கண் டனையர் என்*
*இளையரும், வேந்தனும்*
*அல்லவை செய்யான் காக்கும்;*
*அதன்தலை*
*ஆன்(று) அவிந்(து) அடங்கிய*
*கொள்கைச்*
*சான்றோர் பலர் யான் வாழும்*
*ஊரே'* (புறம்:191)

என்பது பாடல். இப்பாட்டைப் படிக்குந்தோறும் பிசிராந்தையரின் வீடும், ஊரும், அரசியற் சூழலும் எத்தகைய நாகரிகமுடையதாக இருந்தது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. நாகரிகம் என்பதற்குக் கண்ணோட்டம் என்றும் ஒரு கருத்துண்டு.

*'கருமம் சிதையாமல் கண்ணோட*
*வல்லார்க்கு*
*உரிமை யுடைத்திவ் வுலகு'*
- குறள

தம் காரியம் கெடாத வகையில் கண்ணோட்டம் செய்யவல்ல அரசர்க்கு இவ்வுலகமே சொந்தமாகும். நாகரிக வாழ்வை நடுநிலை வாழ்வு என்றும் கூறலாம். பகைவர், நண்பர், அயலார் என்னும் மூவகையாரிடத்தும் முறைமை தவறாது ஒழுகப் பெறின் அந்த அறமே சிறந்த நாகரிகமாகும். இது சான்றோர்க்கே எளிதாக அமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்த்துகிறோம்

எமது கல்லூரியின் முன்னாள் உப அதிபரும்
எமது ஆசானுமாகிய

### உயர்திரு. வே.வில்லவராஜன்

அவர்களின்

சேவை நலனுக்கும், அவரது சிறப்பான எதிர்கால வாழ்வுக்கும் எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மன மகிழ்ச்சியடைகின்றோம்.

முகாமைக் கற்கைகள் வணிகபீட மாணவர்கள்,
யா/யூனியன் கல்லூரி.

(5229)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 11 - 05 - 1949



உதிர்வு 28 - 05 - 2002

திருமதி

### குலஞானநிதி தியாகராசா (லலிதா)

நாளை (27.06.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அ.மி.த.பாடசாலை அருகில்,*
*கோட்டு வளவு,*
*பொலிகண்டி.*

குடும்பத்தினர்.

(5231)

## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் ஆசிரியை
செல்வி மனோரஞ்சினி பாலசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி

அவர்களின் மறைவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

(5239)

## அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு ஈ.சீ.ஜீ. கருவிகள்

தென்மராட்சி,ஜுன்26

அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு ஈ.சீ.ஜீ கருவிகளும், ஒட்சிசன் சிலிண்டர்களும் முதல் தடவையாக சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் விமலேந்திரன் மேற்கொண்ட முயற்சியை அடுத்து இவை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## பளையில் மீண்டும் கள்ளுத் தவறணைகள்

தென்மராட்சி,ஜுன்26

பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைமையலுவலகம் மீண்டும் பளையில் இயங்கத் தொடங்கியதையடுத்து அப்பிரதேசத்தில் ஏழு கள்ளுத் தவறணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புலோப்பளை, வண்ணான்கேணி, பளை நகரம், முகாவில், இயக்கச்சி, சோரன்பற்று, மருதங்கேணி ஆகிய இடங்களில் கள்ளுத் தவறணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## பதவியுயர்வு வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்26

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆய்வுகூட உதவியாளர் தரம் IIஇல் பணிபுரியும ஆய்வுகூட உதவியாளர்களை தரம் Iஇற்குப் பதவியுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

ஆய்வுகூட உதவியாளர் தரம் IIஇல் 01.01.2002ஆம் வருடத்திற்கு முன்னுள்ள 5 வருடகாலம் தொடர்ச்சியாகச் சேவையாற்றியவர்கள் மேற்படி பதவியுயர்வுக்குச் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிமனைகளில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கமுடியும்.

சேவை மூப்பு அடிப்படையிலும், உள்ள வெற்றிடங்களின் அடிப்படையிலும் இந்தப் பதவியுயர்வு வழங்கபடும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## அறிவித்தல்

மரணச் சடங்கு, அந்தியேட்டி,
அபரக்கிரியைகள செய்பவர்.

*தொடர்பு:*
**சோ.சிவகுமார் குருக்கள்**
கிணற்றடி ஒழுங்கை,
தில்லைவயல், ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

(5210)


Nilkamal

எமது யாழ்ப்பாண வாடிக்கையாளர்களுக்கு

உங்கள் அபிமான
நில்கமால் வீட்டுத் தளபாட நிறுவனத்தினர்
யாழ்ப்பாணத்தில் தமது வாடிக்கையாளர்களின்
வசதி கருதி

அம்பிகை களஞ்சியம்

நிறுவனத்தினரை ஏக விநியோகத்தர்களாக பெருமையுடன் நியமித்துள்ளார்கள் என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றார்கள்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:

எஸ்.எம்.ஜீ.மரியதாஸ்
அம்பிகை களஞ்சியம்,
*41, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. : 021-2511*

NILKAMAL ESWARAN PLASTICS (PVT) LTD.
328, Madapatha Road, Batakettara, Piliyandala.
Tel: (074) 215268 or (074) 212660 - 3 Fax (074) 215267
Customer Hotline: (074) 212664
E.mail: mktneppl@eureka.lk

(C/22700)


## கண்ணீர் அஞ்சலி

முகாமைத்துவ வணிக பீடத்தின் 3ஆம் வருட முகாமைத்துவமாணவன்

### ம. மங்களேஸ்வரன்

23.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார் இவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தக்கொள்கின்றொம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

முகாமைக் கற்கைகள்
வணிக பீட மாணவர் ஒன்றியம் (MUSU)

(5232)

## கண்ணீர்க் காணிக்கை

யா/இராமநாதன் கல்லூரியில் வதிவிடப்பயிற்சி பெறும் எமது சக ஆசிரிய மாணவனான ப.சு[illegible]குமார் அவர்களின் தந்தையார்

### த.பரநிருபசி[illegible]ம் *(ஓய்வுபெற்ற அதிபர்)*

அவர்களின் மறைவினால் துய[illegible] அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர்கள்
சேவைமுன் பயிற்சிநெறி இரண்டாம் அணி,
இராமநாதன் கல்லூரி.

(5230)

## கண்ணீர் அஞ்சலி

3ஆம் வருட முகாமைத்துவ மாணவன்

### ம.மங்களேஸ்வரன்

23.06.2002 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

3ஆம் வருட முகாமை கற்கைகள்
வணிக பீட மாணவர்கள்.

(5233)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் ஜெ.தமிழழகன் அவர்களின் அம்மப்பா

### நாகலிங்கம் சோமசுந்தரம்

அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நண்பர்கள்,
2ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்.

(5228)

## மரண அறிவித்தல்கள்

### விஜயரத்தினம் விமலநாதன் (மணி)

*(தெல்லிப்பழை)*

தெல்லிப்பழை, ஆனைக்குட்டி வளவைச் சேர்ந்த அமரர்களான விஜயரத்தினம் - தங்கம்மா தம்பதியினரின் புதல்வன் விமலநாதன் (மணி - முன்னாள் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை உதவிக் கணக்காளர் - R.V.D.B. Asst. Accountant) நேற்று (25.06.2002) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், பன்னாலை அமரர்களான கந்தையா - மூத்ததங்கம் தம்பதியினரின் மருமகனும், விஜயகுலன் (குலன்), விமலினி (விம்மி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இளவழகனின் அன்பு மாமனாரும், பரமேஸ்வரி, கமலேஸ்வரி, அமரர் அப்பாத்துரை, ஜெகநாதன், அமரர் குகநாதன், பாக்கியநாதன், சர்வேஸ்வரி, கமலநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஸ்ரீசோமஸ்கந்தர், குலசிங்கம், சந்திரவதனா, நாகேஸ்வரி, சரோஜா, விநாயகமூர்த்தி, நந்தினி, செல்லம்மாள், அமரர் பாலசுப்பிரமணியம், சரஸ்வதி, பரமேஸ்வரி, அமரர் மகேஸ்வரி, அன்னலட்சுமி, விஜயரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.06.2002) புதன்கிழமை பொறளை ஜயரத்தின மலர்ச்சாலையில் காலை ஏழு மணிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் மூன்று மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொறளை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27/12, Parakumba Place,*
*Colombo - 06.*
*T.P. No.: 502447*

தகவல்:
வி.விஜயகுலன்
(மகன்)

(C/22696)

### மாணிக்கவாசகர் விஜயவர்மன்

*(எக்ஸ்போ வீடியோ உரிமையாளர் - கோண்டாவில்)*

தாவடியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகக் கொண்டவருமான மாணிக்கவாசகர் விஜயவர்மன் (21.06.2002) வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் ரேணுகாவின் பாசமிகு அன்புக் கணவரும், லருசனின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - யோகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், செல்வரத்தினம், காலஞ்சென்ற பத்மா செல்வரத்தினத்தின் அன்பு மருமகனும், மகாலிங்கம் (ஜேர்மனி), விக்கிரமன் (ஜேர்மனி), விமலாதித்தன் (இந்தியா), விக்னேஸ்வரன் (லண்டன்), ராகினி (கொழும்பு), காலஞ்சென்ற ரஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ராஜேஸ்வரி (ஜேர்மனி), சந்திராதேவி (ஜேர்மனி), தேவிகா (இந்தியா), தயாபரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - சுயாதீன தொலைக்காட்சி நிலையம்), ரதிகா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆத்மன், அனித்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஆரபி, ஆதவன், ஆதர்ஷன் (ஜேர்மனி), வித்தியா, கீர்த்திகா, பானுமீரா, செந்தூரன், வில்மா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், பிரசாந்தினியின் (கொழும்பு) பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2002) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.7, K.K.S. வீதி,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*
*T.P.: 3100*

தகவல்:
மனைவி, மகன்.

(5234)


# சிங்கர் சந்தைபடுத்தும் தரமுயர்ந்த சாதனங்களை யாழ்ப்பாணத்திலும் வாங்கலாம்.























இதோ, யாழ் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

150 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கிவரும் சிங்கர் நிறுவனத்தினால் வழங்கப்படும் தரமுயர்ந்த வீட்டுப்பாவனை சாதனங்கள் இப்பொழுது உங்கள் காலடிக்கு வந்துள்ளன.





நவீன தொழில்நுட்பத்தின் படைப்புக்களான சிங்கர் தையல் மெஷின்கள், குளிரூட்டிகள், விவசாய நீரிறைக்கும் இயந்திரங்கள், சலவை இயந்திரங்கள், சமையலறை உபகரணங்கள், வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், மின்விசிறிகள், துவிச்சக்கர வண்டிகள் முதலியவற்றை நீங்கள் கீழ்க்காணும் விற்பனை நிலையங்களில் கொள்வனவு செய்யலாம்:



**SINGER HITACHI Whirlpool AKAI**

**SISIL TEFAL Prestige Welling**







## சிறந்த பயனடைய சிங்கரை நாடுங்கள்!

**ஊஷா ஏஜென்சி**
62/32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**சிங்கர்®**
மாசற்ற மேன்மை

Advantage-DY&R

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி நல்லூர். (5212)

உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியில் 43 பரப்பு தோட்டநிலம் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.கா.சாந்திநாதன்; நந்தாவில் அம்மன் வீதி, கோண்டாவில் மேற்கு. (5219)

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (5222)

## காணி விற்பனைக்கு

நான்கு பரப்புடன் கூடிய அரிசி ஆலை (கோட்டா மில்) விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: [illegible]கலிங்கம், அழகா் அரிசி ஆலை, ஞானசம்பந்தா் வீதி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை. (5221)

## வீடு விற்பனைக்கு

இல.24, கச்சேரி - நல்லூர் பிரதான வீதியுடன் சகல வசதிகளும் கூடிய கச்சேரிக்கு அண்மையாகவும் அமைந்துள்ள 2 1/2 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பொ.விமலநாதன், இல.7, கற்பக விநாயகர் வீதி, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (5147)

சுண்டுக்குளி, 60/1, விதானையார் வீதியில், பிரபல தனியார் பாடசாலைகள், கச்சேரி ஆகியவற்றிற்கு அண்மையில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் அமைந்துள்ள 1 1/2 பரப்பு காணி புதிய வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டியதில்லை. (5211)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழி 1/4 கிலோவில் இருந்து வேண்டிய நிறைகளில் எந்நேரமும் பெற்று கொள்ளலாம். தொடர்பு: 61, சேர் பொன். இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயில் வீதி முன்பாக. (5174)


புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, (வட்டக் குளம் முன்பாக) கட்டைப்பிராய். (5106)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 40 வயது, A/L சித்தியடைந்த, அழகிய பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். குறிப்பில் 1ஆம், 7ஆம், 8ஆம் வீட்டில் செவ்வாயும் சூரியனும் சேர்ந்திருப்பது விரும்பத்தக்கது. தாரம் இழந்தவரும் கவனிக்கப்படும். தொடர்பு: விளம்பர இல.1548, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5126)

## மணமகள் தேவை

1966ஆம் ஆண்டு, பூராடம் 4ஆம் பாதம், செவ்வாய்க்குற்றம் அற்ற, Civil Engineer ஆக ஆஸ்திரேலியாவில் உள்ள மணமகனுக்கு பொருத்தமான மணப்பெண் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5217)




முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

License No : 50445

BS No : 5412:1996
License No : KM41240

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC

முத்திரையை அவதானியுங்கள்

# 95 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

ஆண்டவன் படைப்பில்
12 - 08 - 1958



அநியாய அழிப்பில்
25 - 03 - 2002

## அமரர் மாணிக்கவாசகம் நவராசா

*(பாதுகாப்பு உத்தியோகத்தர், வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை)*

நாளை (27.06.2002) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*உச்சில் லேன்,*
*கரவெட்டி தெற்கு, கரவெட்டி.* (C/22693)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# துயர் பகிர்கின்றோம்

எமது சக ஊழியர் **பா.மாலினி** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கமலினிதேவி பாலகணேசன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர்களது துயரில் பங்கு கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஊழியர்கள்,
CEYLINCO INSURANCE CO, LTD.
*(LIFE DIVISION)*

(5225)

# உ

ஆனைக்கோட்டை

அருள்மிகு ஸ்ரீ மூத்தநயினார் ஆலய வருடாந்த

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

**அடியார்களே!**

நிகழும் சித்திரபானு வருடம் ஆனி மாதம் 12ஆம் நாள் இன்று (26.06.2002) புதன்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகும் வருடாந்த மஹோற்சவம் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும்.

மஹோற்சவ பிரதம குருக்கள்
சோதிட பூஷணம்
*சிவப்பிரம்மஸ்ரீ ந.ஜெகதீஸ்வரக்குருக்கள்.*

அடியார்கள் வருக திருவருள் பெறுக.

*மூத்தநயினார் ஆலயம்,*
*ஆனைக்கோட்டை.* (5216)

ஆலய பிரதம குருக்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
06 - 09 - 1957



உதிர்வு
27 - 05 - 2002

## அமரர் ஆ.சத்தியமூர்த்தி

*(மினிபஸ் உரிமையாளர்)*

குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து
உழைத்த உங்கள் உடல் ஓய்வு தேடியதோ?
கலங்கரை விளக்காய் காட்சிதந்த உங்கள் உடல்
கடவுள் இருப்பிடம் தேடியதோ?

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.06.2002) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வாரி வட்டம்,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.* (5218)

- மனைவி, தாய், பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா வைத்திலிங்கம்

தட்டான்கடவை, பாரதி வீதி, கம்பர் மலை, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா வைத்திலிங்கம் அவர்கள் 23.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அழகம்மா அவர்களின் அன்புக் கணவரும் பூபாலசுந்தரம் [(J.P.), ஓய்வுபெற்ற அதிபர்], இராசசுந்தரம் (திருமலை), அழகலிங்கம் (ஜேர்மன்), தியாகலிங்கம் (கனடா), நவீந்திரராசா (கனடா), திருமதி த.ஈஸ்வரி, திருமதி சி.இராசேஸ்வரி, திருமதி ச.பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் 23.06.2002 ஞாயிற்றுக்கிழமை ஊரிக்காடு, கடற்கரை மயானத்தில் நடைபெற்று முடிந்தன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தட்டான்கடவை,*
*கம்பர்மலை,*
*வல்வெட்டித்துறை.* (5220)

தகவல்:
வ.பூபாலசுந்தரம்
(மகன்).

## செல்வன் மகேஸ்வரன் மங்களேஸ்வரன்

*(யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 3ஆம் வருட மாணவன்)*

சுன்னாகம், சூராவத்தையை வதிவிடமாகக் கொண்ட செல்வன் மகேஸ்வரன் மங்களேஸ்வரன் 23.06.2002 ஞாயிறன்று காலமானார்.

அன்னார் யாழ்.பல்கலைக்கழ முகாமைத்துவ பீட 3ஆம் வருட மாணவனும் மகேஸ்வரன் - மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் மங்களரூபன், மங்களசுதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சரஸ்வதி, சண்முகம் மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், பேரின்பநாதன் - லோகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு பெறாமகனும் சிவலோஜினி, பத்மலோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2002) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூராவத்தை,*
*சுன்னாகம்.* (5224)

தகவல்:
சி.மகேஸ்வரன் (தந்தை),
தா.பேரின்பநாதன் (பெரியதந்தை).

# 3ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

## செல்வி த. நவீனா (நவிக்குட்டி)

கைதடி மேற்கைச் சேர்ந்த
திரு.திருமதி தயாபரன் ~ சுபா தம்பதியினரின்
செல்வப் புதல்வி **நவீனா**

தனது 3ஆவது பிறந்த தினத்தை இன்று (26.06.2002) புதன்கிழமை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

நவிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தீபன் சித்தப்பா, அம்மப்பா, கொழும்பிலுள்ள அம்மம்மா, கேசனா சித்தி, லண்டனிலுள்ள மாமாமார், சித்தப்பாமார், அத்தை மார், டென்மார்க்கிலுள்ள பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், கைதடி வளர்மதி வீதியைச் சேர்ந்த தயாளன் மாமா, பிறேஅத்தை, பிரியங்கா மச்சி மற்றும் சித்தப்பாமார், அத்தைமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.



*வளர்மதி வீதி,*
*கைதடி மத்தி, கைதடி.* (5223)

தகவல்:
கதிரவன் (அப்பப்பா)
(கதிரவன் ஆட்டோ சேவை)

# சிங்களவர்களின் அச்சத்தீயில் குளிர்காயும் இனவாதிகள்

**இந்நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றியும், அவை தோல்வியில் முடிந்ததற்கான காரணங்களையும் ஆராய்கிறார் கட்டுரையாளர் அனுராதா. 'லங்காதீப' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு 10 நாள்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவது என்ற அமைச்சரவைத் தீர்மானம் குறித்த தகவல்கள் வெளியானபோது பலர் அந்த முடிவை ஏற்றுக்கொண்டனர் போல் தோன்றினாலும் அரசியல் ரீதியாகச் செயற்படும் ஒரு சிறு குழுவினர் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு எதிராக கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவருவதையும் அவதானிக்க முடிகிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்நாட்டில் நீக்கும்போது அந்த அமைப்பு மீது வேறு நாடுகள் விதித்துள்ள தடையும் நீக்கப்பட்டுவிடும் எனவும் அதன்பின்னர் விடுதலைப் புலிகள் மீண்டும் சுதந்திரமாகச் செயற்பட்டு தனிநாட்டை உருவாக்கும் தமது நோக்கத்தை விரைவுபடுத்துவர் எனவும் தடைநீக்கத்தை எதிர்ப்பவர்கள் கூற ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் மற்றுமொரு விடயத்தையும் எதிர்த்துவருகின்றனர். அதாவது இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது தொடர்பாகவே அவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். தற்போது இடைக்கால நிர்வாகம் தொடர்பான கருத்துக்கள் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளன. அதுவும் சிந்தனை வடிவத்தில்மட்டுமே உள்ளது. ஆனால், எதிர்பபவர்களோ இடைக்கால நிர்வாகம் என்பது தனியான தமிழீழ அரசை அமைப்பதாகும் என எண்ணுகின்றனர்; கூறிவருகின்றனர். இவ்வாறு கூறும் அவர்கள், இடைக்கால நிர்வாக அமைப்பு எவ்வாறு உருவாக்கப்படப்போகிறது என்பது பற்றியோ அல்லது இடைக்கால நிர்வாகம் அமைப்பது குறித்து இன்னும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை என்பது பற்றியோ கவனஞ்செலுத்தவில்லை. பதிலாக இடைக்கால நிர்வாகம் என்பது தமிழீழ அரசே என்ற தீர்மானத்துக்கு வந்த அவர்கள் அவ்வாறே பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகளால் நிர்வகிக்கப்படும் காவல்துறை, நீதிமன்றங்கள், வங்கிகள் போன்ற நிர்வாக அலகுகள் தொடர்பாக பீதி உருவாகும் விதத்தில் தகவல்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன. அண்மைய நாள்களில் அவ்வாறான தகவல்கள் வெகு விரைவாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதேநேரம் யுத்தநிறுத்தத்தின் பின்னணியின் விடுதலைப் புலிகளின் மேற்குறித்த நிர்வாக அலகுகள் சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்புக்களும் கிடைத்துள்ளன.

இருப்பினும் அமைச்சரவையின் தீர்மானம் தொடர்பாகக் கருத்து வெளியிடும் ஒரு சிலர், விடுதலைப் புலிகள் தனியான ஒரு நாட்டை உருவாக்கும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர் எனக் கூறத் தொடங்கிவிட்டனர். எனவே நாடு துண்டாடப்படுவதை தடுக்கவேண்டுமாயின் சமாதான முயற்சிகளைக் கைவிட்டு யுத்தத்தை மேற்கொள்ளவேண்டும் என இந்தப் பிரிவினர் கூற முற்படுவதைக் கவனிக்க முடிகிறது.

இவர்கள் உண்மையான தகவல்களையும் போலித் தகவல்களையும் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். வடக்கு - கிழக்கில் உள்ள சிங்கள வாசகங்களை அகற்றுமாறு விடுதலைப் புலிகள் கட்டளையிட்டுள்ளனர் என்பது இவ்வாறு அவர்கள் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையாகும். ஆனால் இது எதுவித அடிப்படைகளுமற்ற பொய் என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் இவ்வாறான அடிப்படையற்ற தகவல்களை பயன்படுத்துவதால் தென் பகுதியில் பொதுமக்கள் இடையே பீதி அதிகரித்துள்ளது.

இவ்வாறான பொய்ப் பிரசாரங்கள ஒருபுறம் இருக்கையில் உண்மை நிலைகளைத் திரித்துக்கூறி மக்களிடையே பதற்றத்தை உருவாக்கும் சம்பவங்கள் இந்நாட்டு இனப்பிரச்சினை வரலாற்றில் தொடர்ந்து இடம் பெறுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

ஆரம்பத்தில் தாய் மொழிகளே அரசாங்க மொழிகளாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்த தென்பகுதி அரசியல் கட்சிகள், பின்னர் சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக்கப்பட வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டன. சிங்களவர்களின் உரிமைகள் பறிபோகலாம் என்ற எண்ணத்தினால் எழுந்த அச்சமே இதற்குக் காரணமாகும். வாகனங்களுக்கு சிங்கள ஸ்ரீ இலக்கத்தைப் பயன்படுத்தாமல் பதிலாக சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் பொதுவான எழுத்தைப் பயன்படுத்தலாம் எனத் தமிழரசுக் கட்சி விடுத்த கோரிக்கைக்கும் தவறான அர்த்தம் புரியப்பட்டது. சிங்கள மக்களுக்கு விடுக்கப்பட்ட அபாய அறிவிப்பாக அன்று இந்தக் கோரிக்கை கருதப்பட்டது. இருப்பினும் சிங்கள ஸ்ரீக்குப் பதிலாக ஒரு கோட்டைப் (-) போடுவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என இந்நாட்டு மக்கள் உணர்வதற்கு முன்னர் நாட்டில் எத்தனையோ துன்பியல் சம்பவங்கள் இடம்பெற்று முடிவடைந்துவிட்டன.

அன்று பண்டா - செல்வா உடன்படிக்கையை எதிர்த்து ஊர்வலம் சென்றதும் பின்னர் டட்லி - செல்வா உடன்பாட்டை எதிர்த்து மறுதரப்பினர் ஊர்வலம் சென்றதும் ஒரே நோக்கத்திற்காகவே ஆகும். அதாவது இந்நாடு துண்டாடப்படப் போகிறது என்ற அச்சத்தை மக்களிடையே உருவாக்குவதற்காகவேயாகும். பல்வேறு பிரசாரங்கள் மூலமாக சிங்கள மக்களிடையே உருவாக்கப்பட்ட பதற்ற நிலை மற்றும் அச்சம் ஆகியனவற்றைக் கொண்ட எதிர்ப்பானது, அந்த உடன்பாட்டையே ஒரு தாப்பாகக் கிழித்தெறியும் நிலைமையில் இறுதியில் முடிவுற்றது. இன்றும் நாம் அந்தச் சம்பவத்தின் பலாபலனை அனுபவித்து வருகின்றோம்.

அந்த உடன்பாடுகளால் சிங்கள மக்களுக்கோ நாட்டிற்கோ தீங்கு ஏற்பட்டிருக்கும் என இன்று விவாதிப்பார் யாருமில்லை.

இருப்பினும் அன்று நிலைமை கவலையளிக்கும் விதத்தில் பாரதூரமாகவே இருந்தது. இருப்பினும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்படுவதற்கும் லட்சக்கணக்கானோர் அகதிகளாவதற்கும் காரணமாக அமைந்த பயங்கர யுத்தத்தைத் தடுப்பதற்கான முதல் சந்தர்ப்பமாக அவை அமைந்தன. அதாவது அன்றைய சம்பவங்களே இன்றைய யுத்தத்திற்கான அடிப்படைக் காரணங்களாகும்.

1980இல் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைத் திட்டத்தின் மூலம் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண சிறிதளவு வாய்ப்பு இருந்தது.

மாவட்ட அபிவிருத்தி முறையை ஏற்று அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி அந்தத் தேர்தலில் போட்டியிட முன் வந்தது முக்கியமான சம்பவமாகும்.

ஆனால் தென்பகுதியிலுள்ள இனவாதிகள் இதை பாரிய அச்சுறுத்தல் என நினைத்தனர். ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் அனுப்பப்பட்ட மூன்று அமைச்சர்கள் உட்பட தென்பகுதியில் இருந்து சென்ற கூட்டத்தினர் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் கள்ள வாக்குகளை - போலிவாக்குகளைப் போட்டுத் தேர்தலில் வெற்றிபெற எடுத்த முயற்சிகள் அனைத்தும் பலனளிக்கவில்லை. இருப்பினும் ஆறு வாக்குப் பெட்டிகள் காணாமற்போயின. யாழ்.பொது நூலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சம்பவமும் வரலாற்றில் கறைபடிந்த பக்கமாகும்.

அதன் பின்னர் மத்திய அரசு அதிகாரங்களைப் பரவலாக்கி மாவட்ட அபிவிருத்திசபை முறையை நகைப்புக்கிடமாக்கியது. யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராக குருநாகலில் இருந்து ஒருவர் நியமிக்கப்பட்டார். (யு.பி.விஜயகோன்) மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு உரியமுறையில் அதிகாரங்களோ பணிகளோ வழங்கப்படவில்லை. சிறிது காலத்திற்குள் மாவட்ட அபிவிருத்தி சபை முறை கைவிடப்பட்டது. சிங்களவர்களின் உரிமைகளுக்கு விடுக்கப்பட்ட பாரதூரமான அச்சுறுத்தல் எனத் தென்பகுதி இனவாதிகள் கருதியதே அதற்கான காரணமாகும்.


இந்நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 1987இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய உடன்பாடு மிகவும் முக்கியமான சம்பவமாகும். இருப்பினும் அதனை எதிர்த்தும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்தியா தலையிட்டு தமிழ் மக்களுக்கு தனிநாடு ஒன்றை உருவாக்கிக் கொடுக்கப் போகிறது என ஆர்ப்பாட்டக்காரர்கள் நாட்டுமக்களுக்குத் தெரிவித்தனர்.

அன்று நாடெங்கும் அரச உடைமைகள் சேதமாக்கப்பட்டன. பஸ் வண்டிகள் கொளுத்தப்பட்டன. இவற்றிற்குக் காரணமும் கூறப்பட்டது. சிங்கள மக்களுக்கு அநியாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை உருவாகியுள்ளது எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் காரணம் கூறினர். ஆனால் இன்று அந்தச் சம்பவங்கள் குறித்துத் திரும்பிப் பார்ப்போமானால் அவ்வாறான அச்சுறுத்தல்கள் எவையும் இருக்கவில்லை என்பது தெளிவு. அன்று அந்த எதிர்ப்பலையை உருவாக்கியவர்கள்கூட அதற்கான பொறுப்பை ஏற்க முன்வராதது இதை உறுதிப்படுத்துகிறது.

மற்றுமொரு சம்பவமும் இலங்கை - இந்திய உடன்பாட்டுடன் தொடர்புடையது. இந்த உடன்பாட்டையடுத்து யுத்தம் வெடித்தபோது விடுதலைப் புலிகளை ஒடுக்கும் பணியில் இந்தியப் படையினர் ஈடுபட்டனர். ஆனால் அந்த இந்தியப் படையின்ரின் வருகையை எதிர்த்தே தென்பகுதியில் கிளர்ச்சிகள் இடம்பெற்றன. ஆனால் இந்தக் கிளர்ச்சியானது நேரடியாக இந்தியப் படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படவில்லை. பதிலாக இடதுசாரிகளில் இருந்து ஐ.தே.கட்சியினர்வரை - பொலீஸ் அதிகாரிகளில் இருந்து சிப்பாய்களின் குடும்பங்கள் வரை - தேர்தலில் வாக்களிக்கச் சென்ற வாக்காளர் வரை படுகொலை செய்யும் படுகொலை கலாசாரம் ஆரம்பமானது. அதன்மூலம் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகளும் அதனை அடக்க அரச படைகள் மேற்கொண்ட பதில் நடவடிக்கைகளும் காரணமாக நாட்டில் இரத்த ஆறு ஓடியது. இந்தியா தொடர்பான அச்சம் பரவியதே இவற்றிற்கான காரணமாகும். அன்று இந்திய எதிர்ப்பை அனுமதித்த புத்திஜீவிகள்கூட இந்தியப் படைகளை வெளியேற்றியது நாங்கள் மேற்கொண்ட முட்டாள்தனம் என இன்று கூறுகின்றனர்.

**தமிழில்: கஜனி**

இவ்வாறான அனைத்துச் சம்பவங்களுடனும் பல்வேறு அரசியல் பிரிவுகளும் பல்வேறு மதப் பிரிவுகளும் தொடர்புகளைக் கொண்டிருந்தன என்பதை நாம் அனுபவ ரீதியாகக் கண்டுள்ளோம். அந்தந்தச் சந்தர்ப்பங்களின்போது மக்களிடையே அச்சத்தையும் பதற்றநிலையையும் உருவாக்கி - அவர்களை உணர்ச்சிவசப்படுத்தி - பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் அவர்கள், பின்னர் அவற்றின் பெறுபேறுகளைப் பொறுப்பேற்கத் தயாராய் இருப்பதில்லை. நாட்டிற்கு ஏற்படும் நட்டங்களுக்குப் பொறுப்பேற்கவும் யாருமில்லை. இருப்பினும் சிலகாலத்தின் பின்னர் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் வேறு ஒரு விதத்தில் முன்னர் மேற்கொண்ட குற்றச் செயல்களை மீண்டும் மேற்கொள்ள அவர்கள் முன் வருவர்.



**1987இல் இலங்கை - இந்திய உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் நடைபெற்ற மரியாதை அணிவகுப்பின்போது இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைக் கடற்படை வீரர் ஒருவர் தாக்க முற்படுகிறார்.**

இங்கு மற்றுமொரு விடயத்தைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும். அதாவது சிங்களவர்கள் இவ்வாறான அச்சத்திற்கும் பதற்றத்திற்கும் மிகவும் சுலபமாக ஏன் ஆளாகிறார்கள் என்பதே அதுவாகும். அதற்கு முக்கிய காரணங்கள் உள்ளன. உலக மக்களுடன் ஒப்பிடுகையில் சிங்களவர்கள் மிகச் சிறுபான்மையினர். அவர்களுக்கு இந்த நாடு மட்டுமே உள்ளது. சிங்கள மக்கள் நினைக்கும் பாரிய பிரச்சினை இதுவாகும். இது முதலாவது காரணம்.

சிங்களவர்களுடன் ஒப்பிடுகையில் தமிழ் மக்கள் உலகில் பல நாடுகளில் வாழ்கின்றனர். தென் இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழும் பல கோடி மக்களுடன் ஏதோவித வரலாற்றுத் தொடர்பு அவர்களுக்கு உண்டு. எனவே சிறிலங்காவில் தமிழ் மக்கள் சிறுபான்மையினராக இருப்பினும் பிராந்தியத்தைப் பொறுத்தவரை (தமிழ்நாட்டுடன்) அவர்கள் சிங்களவர்களிலும் பார்க்கப் பெரும்பான்மையினரே. சிங்களவர்களின் அச்சத்திற்கு அடிப்படைக் காரணம் இதுவேயாகும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிங்களவர்களுக்குள்ள இந்தப் பலவீனமான உணர்வே பயன்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு பிரசாரங்களில் இதைப் பயன்படுத்தித் தங்கள் அரசியல் அல்லது வேறு தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அப்பாவிச் சிங்கள மக்கள் பகடைக் காய்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர். இதனால் தொடர்ந்து பாதிக்கப்படுவது நாட்டிலுள்ள சாதாரண பொதுமக்களே ஆவர்.

அண்மையில் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தில் சிங்களவர்கள் அடிமைப்படுத்தும் இனம் என ஐ.நா.வின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. அதாவது உலகிலுள்ள அடிமைப்படுத்தும் இனங்களில் சிங்களவர்களும் அடங்கியுள்ளனர் என ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் அவவாறு கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட அறிக்கையைத் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இருப்பினும் இவ்வாறான பிரசாரங்கள் யாரால் என்ன நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றன என்ற வினா எழுகிறது. இதற்கு ஒரேயொரு காரணம்தான் இருக்க முடியும். அதாவது சிங்களவர்களுக்கு தங்கள் பாதுகாப்புக் குறித்துப் போதுமான உணர்வுகள் இல்லாத காரணத்தால் அவர்களைப் பீதிக்கு ஆளாக்கி அதன்மூலம் அரசியல் ஆதாயங்களைத் தேடுவதே ஒரு சிலரின் தேவையாக அமைந்துள்ளது. இதைவிட வேறு காரணங்கள் எவையும் இருக்கமுடியாது.

அண்மையில் மற்றுமொரு செய்தி வெளியாகியிருந்தது. அதாவது கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தமிழ்மக்கள் அதிகமாகக் குடியேறி அந்த மாவட்டங்களில் அவர்கள் பெரும்பான்மையினராவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதே அந்தச் செய்தியாகும். அது தொடர்பாக போலியான புள்ளி விவரங்களும் தரவுகளும் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டில்கூட அவ்வாறான நிலைமை உருவாகவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவும் இந்தப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக உள்ளூர் வாசிகளைத் தூண்டும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் முயற்சி என்றே நம்ப முடிகிறது.

இவ்வாறான ஆபத்துகள் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய வேளை தற்போது உருவாகியுள்ளது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாயின் சில தீர்க்கமான வழிகளைப் பின்பற்ற வேண்டும். சுமார் 20 ஆண்டுகளாக யுத்தத்தில் ஈடுபட்ட எதிரியுடனேயே நாங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளோம். மறுதரப்பு எதிரியாகவுள்ள காரணத்தாலேயே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள் (புலிகள்) உடனடியாக நண்பர்கள் ஆகிவிடுவார்கள் என்றோ அல்லது சண்டையிடுவார்கள் என்றோ எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். ஆனால் சமாதான முயற்சிகளின் முடிவில் ஆயுதங்களைக் கீழே போட்டு ஏதாவது ஓர் அரசியல் வியூகத்திற்குள் செயற்பட அவர்களை இணங்கவைக்கும் முயற்சிகளைக் கைவிட முடியாது. தற்போதுள்ள ஒரேயொரு நம்பிக்கை என்னவெனில் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வைத் தாங்கள் ஏற்போம் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதே ஆகும். யுத்தத்தில் இருந்து சமாதானத் தீர்வினை நோக்கிச் செல்வதால் மாத்திரம் மோதல்கள் முடிவுக்கு வரா என்பது போரியல் வல்லுநர்களின் கருத்தாகும். மோதல் தொடர்பான பிரசாரங்களைத் தவிர்த்து அரசியல் ரீதியில் தீர்வினைக் காண்பதற்கு பொருத்தமான வியூகம் அமைக்கப்படவேண்டும். மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவது நீண்டகாலச் செயற்பாடாகும். அது மிகவும் கடினமான பணியாகும். இருப்பினும் அர்ப்பணிப்புகளால் மட்டுமே அதை நிறைவேற்ற முடியும்.

இவ்வாறான வேளையில் சிங்கள மக்களின் உணர்ச்சிகளைத் தூண்ட சந்தர்ப்பவாத அரசியல் சக்திகள் முனைப்புடனுள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக இதை அரசும் சமாதான முயற்சிகளில் தொடர்புடையோரும் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொண்டால் மட்டும் போதாது. சமாதான நடவடிக்கைகளில் மக்களின் இவ்வாறான உணர்வுகளைப் போக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் சகோதரர் காயம்

அல்வாயில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்து அங்கிருந்த மோட்டார் சைக்கிளில் வலம்வரச் சென்ற சிறுவர்கள் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்த சம்பவம் கடந்த ஞாயிறன்று இடம்பெற்றுள்ளது.

வடமராட்சிகிழக்கு, மணற்காட்டைச் சேர்ந்த பொன்ராசா றெஜிந்தமெல் (வயது15) அவரது சகோதரரான பொனராசா ரஜிந்தமெல் (வயது11) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்களில் பொ.றெஜிந்தமெல் என்பவர் முகத்தில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-117)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 08 - 1925 | 27 - 05 - 2002 |

## திருமதி சின்னம்மா பொன்னுத்துரை

காலனவன் உம்மைக் கவர்ந்து சென்று
மாதம் ஒன்றாகி விட்டாலும் துன்பத்தில்
ஓலமிடும் எம்மிதயம் ஓயாதம்மா!
வேளை வந்து நாமும் உம்மைச் சேரும்வரை
தேவனவன் பாதமலர் பற்றி நிற்போம்!

*யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எமது இல்லத்தில் இன்று (26.06.2002) புதன்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

பிரிவால் துயருறும்:
மகள், பேரன் மற்றும் உறவினர்.

*இல.733, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (5195)

# நீதிபிறழா.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

யக்கூடியது. ஏனையோரும் முயன்று இதனைப் பெறுதல் நன்மை பயக்கும். சான்றோர் பொதுநலம் விழைந்து, நெறிமுறை அறிந்து அறத்தொண்டு ஆற்றி வாழும் வாழ்விற்குத் துணையாக நிற்பது. நடுநிலை பிறழாத அவர்தம் நெஞ்சமேயாகும்.

கணியன் பூங்குன்றனார் உலக வாழ்வின் உண்மையைத் தெளிந்து, உணர்ந்து பாடிய பாட்டு ஒன்று இதற்குக் கலங்கரை விளக்காக ஒளி பரப்புகின்றது.

*'யாதும் ஊரே; யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா'* (புறம்:192)

என்று தொடங்கும் பாடலே அதுவாகும். ஊரும் நாடும் வாழ விரும்பிய சான்றோர் உலகம் வாழவே வழிகோலினர். அந்தக் கனவு இன்று வரை வெற்றிபெறவில்லை. 'தீதும் நன்றும் பிறர்தரவாரா' என்ற உண்மையைப் புலவர் விளக்குகின்றார். மனத்தைப் பெறுத்தே யாவும் அமையும். மக்களைக் கேளிர் என்றும், பகைவர் என்றும், பிரித்தறியும் புல்லறிவைப் போக்கவேண்டுமெனவும் கூறுகின்றார். தீது நோதல் தரும், நன்று தணிதல் தரும், துன்பமும், இன்ப ஆறுதலும் நுகர்வார் மனத்தின் அளவே அன்றிச் செய்வார் செயலின் அளவு அல்ல. 'நோதலும் தணிதலும் அவற்றோரன்ன' என்றார். இப்பாடலில் மேலும் பல உண்மைகளைப் புலவர் வலியுறுத்துகின்றார்.

*'ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது*
*தெளிந்தனம்*
*ஆதலின் பெரியாரை வியத்தலும் இலம்,*
*சிறியோரை இகழ்தலும் இலம்'* - (புறம்:192)

எனப் பூங்குன்றனார் கூறுவது இன்றும் உலகம் உணர இயலாத சிறந்த உண்மையாகும் ஆனால், இந்த அரிய உண்மையைத் தமிழகம் உணர்ந்து ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகின்றன. இன்றுள்ள கண்மூடி வழக்கங்கள் அவற்றை மண்மூடச் செய்துள்ளன. இன்று இவற்றிற்கு ஓர் அகழ்வாராய்ச்சி தேவைப்படுகின்றது. ☆


JAFFNA COLLEGE
**FOUNDER'S DAY**
PRIZE GIVING

Will be held on Thursday the 27th June 2002
at 3.30 p.m. in the QUADRANGLE

*Chief Guests:* **Rev. Dr.Dyanchand Carr**
(Principal, Tamilnadu Theological Seminary,
Madurai.)
and
**Mrs. Padmini Carr**
*You are cordially invited.*

(C/22692) **Principal.**

**யாழ் நகர வாசிகளே !**

**இதோ இப்போது உங்கள் தேவையறிந்து உங்கள் கரங்களுக்கும்.**

**உயர்தரமான மெழுகு தடவப்பட்ட பாதுகாப்பான**




**அலடின் தீப்பெட்டி**

**ஏக விநியோகத்தர்:**
**ரூபா வெர்சடைல் டிரேடர்ஸ்**
**104ஏ, ஸ்ரான்லி றோட்,**
**யாழ்ப்பாணம்.** (C/22682)

**எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்**






பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்

விலை ரூபா 1.91, 350/-இல் இருந்து மேல்(GST உட்பட)

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, 687167, 687169, பக்ஸ்: 687175

பிரதேச கிளை அலுவலகங்கள்:
■ 174B, கட்டுகஸ்த்தோட்ட வீதி, கண்டி. தொ.பே.: 08-226146, 08-238133-5 ■ 27E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ.பே.: 027-50037 பக்ஸ்: 027-50222 ■ 382,அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ.பே.: 041-28488, பக்ஸ்: 041-27488 ■ நீகல் மாவத்தை, அம்பாறை. தொ.பே.: 063-22997, 063-23662 ■ 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அனுராதபுரம். தொ.பே.: 025-25048/9 பக்ஸ் : 025-25050 ■ தனசிரி கட்டடம் இல.195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொலைபேசி: 045-22389

பெயர்:..........................................................................

விலாசம்:.......................................................................... தொலைபேசி:..........................................

சேவை நிலையம்:..........................................................................

**பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விவரங்களை அனுப்பி வையுங்கள்.**

## சிறுநீரகம் தேவை

21 - 32 வயதுக்குட்பட்ட O Group Negative இரத்த வகையுடையவருக்கு சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகிறது.

தொடர்பு: தொ.இல. 577625 கொழும்பு.
*தகவல்:* MRS.P.M.Thirunavukkarasu
40/4, Temple Rd,
Chundikuli.
(5248)


## கண்ணீர் அஞ்சலி



| தாயின் முத்தாய் | விண்ணின் முத்தாய் |
|---|---|
| 14.08.1976 | 23.06.2002 |

**அமரர் மகேஸ்வரன் மங்களேஸ்வரன்**

*(3ஆம் வருட முகாமைத்துவ மாணவன் - யாழ்.பல்கலைக்கழகம்)*

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சூராவத்தை, சுன்னாகம்.* (5252) - நண்பர்கள்.

## மூன்றாம் மாத நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06.12.1982 | 30.03.2002 |

**செல்வன் லோகேந்திரன் ரமேஷ்குமார்**
**(ரஜனி)**

திதி:26.06.2002

நீ இருந்த போது நிமிர்ந்து நின்றோம் - உனை
இழந்த போது கலங்கி நிற்கின்றோம்.
நேற்றுக் கூடியிருந்த நீ இன்று பிரிந்தாலும்,
"ரஜனி" எனும் இனிய பெயர் என்றும் எம் மனதில்
நீங்காது நிலைத்திருக்கும்!

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா, தங்கை,
உறவினர்கள், நண்பர்கள்.

*செல்வபுரம், உரும்பிராய்.* (5253)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | மறைவு |
|---|---|
| 28.09.1949 | 18.06.2000 |

**அமரர் திருமதி இலட்சுமணன் தவமலர்**

திதி:26.06.2002

எங்கள் அன்புருவே!
எத்தனை ஆண்டுகள்தான் உருண்டோடினாலும்
உம் நினைவு எம்மை விட்டு என்றுமே அகலாது!

*தியேட்டர் வீதி,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

தகவல்:
உமது பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
(5247)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி தவமணி கைலாயநாதன்**

திதி:26.06.2002

அன்புக்கும் பாசத்திற்கும் இருப்பிடமான
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
31 நாள்கள் உருண்டு ஓடினாலும்
உங்கள் நினைவாலேயே உயிர்வாழ்கின்றோம்.

*C.C.T.M.S. லேன்,*
*கொக்குவில் மேற்கு.* (5246) - குடும்பத்தினர்.

### சிங்களவர்களின்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய இனங்களைப் போலவே சிங்கள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளின் மூலமே சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும்.

அத்துடன் எதிர்கொள்ளவுள்ள அச்சுறுத்தல் ஒன்றுள்ளது. அதாவது சமாதான முயற்சிகளின் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் குறித்துத் தவறான விளக்கங்கள் மற்றும் திரித்துக்கூறுவது போன்றனவற்றால் சிங்கள மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக அவர்களை உணர்ச்சிவசப்படுத்த பல்வேறு சக்திகள் மேற்கொள்ளும் முயற்சிகளை எதிர்நோக்க வேண்டிவரும். கடந்த காலங்களைப் போலவே தற்போதும் இந்த முயற்சிகளில் சில சக்திகள் ஈடுபட்டுள்ளன. திறந்த அரசியல் கொள்கைமற்றும் கடுமையான விழிபபு ஆகியனவற்றின் மூலமே அந்தச் சக்திகளைத் தோற்கடிக்க முடியும் இதற்கான பாரிய பொறுப்பு அரசையும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சிவில் அமைப்புகளையும் சாரும்.

இவ்விடயத்தில் தற்போது உருவாகியுள்ள சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தலாம். குறிப்பாக இந்தியாவும், அமெரிக்காவும் ஏனைய உலக நாடுகளும் சிறிலங்காவில் தனியான நாடு ஒன்று உருவாகுவதை எதிர்ப்பதும் அரசியல் தீர்வு தொடர்பாகத் தெரிவித்திருக்கும் பொது இணக்கமும் மிகவும் முக்கியமானவையாகும். இதன்மூலம் மக்கள் மனதில் உருவாகியுள்ள பாதுகாப்பற்ற நிலைமை என்ற எண்ணம் ஓரளவிற்குப் பலவீனமடைவதைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களை வெற்றிகொள்ள மிகவும் நல்ல வாய்ப்புக்கள் உள்ளன. தேவைப்படுவது இதற்கான அர்ப்பணிப்புகளும் நிரந்தரமான அக்கறையுமேயாகும். ★


## தேவை

சமையல் வேலை
தெரிந்தவர்கள் தேவை.
தொடர்பு:-
ஹோட்டல் றொலெக்ஸ்,
340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(5241)

**நாடக களப்பயிற்சியும் வகுப்பும்**

வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்கான களப்பயிற்சி வகுப்பு நாளை (27.06.2002) வியாழன் மாலை 5 மணிக்கு (பு.நே.) ஆரம்பமாகவிருக்கின்றது. இவ்வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

ஆசிரியர்: க.ஸ்ரீகந்தவேள்
*தெஸ்பியன் கலை வட்டம்,*
*மஞ்சத்தடி, இணுவில்.*
(5176)

## கடை வாடகைக்கு கொடுக்கப்படும்

ஸ்ரான்லி வீதியில்
32' நீளமும் 18' அகலமான கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.
*தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:*
**குமாரன் ரூறிஸ் இன்**
67,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (5244)

**லஷ்சுமி** இணுவில்.
பிரசாந், ரிங்கிகன்னா, ரகுவரன்
**மஜ்னு** (ரீஸ்)
தினசரி: 10.30,2.30,6.00 (ப.நே.) (5251)

**நிறஞ்சனாஸ்**
சங்கானை
ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த
**ரோஜாக்கூட்டம்** (ரீஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-22539)

**ராஜா** யாழ்ப்பாணம்.
குணால், மோனல்
மற்றும் பலர் நடித்த
**பேசாத கண்ணும் பேசுமே...**
காட்சிகள்: தினசரி 10.30, 2.30, 5.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30
(C/22538)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா நேற்று (25.06.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் வைரவப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்ரர்) சகோதரியும் சு.சிவபாதம் (ஓய்வுபெற்ற தபாலதிபர், கோப்பாய்), சு.இராசேந்திரம் (C.T.B.கோண்டாவில்), திருமதி கமலேஸ்வரி (கொழும்பு), திருமதி விஜயராணி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் திருமதி தெய்வநாயகி, திருமதி செல்வராணி, சீவரத்தினம் (Licenced Surveyor), தில்லைநாதன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் சிறிபரன், திலீபன், தனுசியா, திருப்பதிகாந்தன், தயாநிதி, சங்கீதா, அனுசியா, அனுறாய், கறனியா, சிவறூபினி ஆகியோரின் பேர்த்தியும் விஸ்வாதிகாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2002) புதன்கிழமை காலை 10 மணிக்கு செட்டித்தெரு, பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டித்தெரு, பருத்தித்துறை* (5237)
தகவல்: சு.சிவபாதம், சு.இராசேந்திரம்

## கந்தவனம் நன்னித்தம்பி

ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய கந்தவனம் நன்னித்தம்பி 24.06.2002 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கந்தவனம் - விசாலாட்சியின் அன்பு மகனும் சின்னத்தங்கத்தின் (கனடா) பாசமிகு கணவரும் சிவனேஸ்வரி (திருகோணமலை), செல்வராணி, தேவதாஸ், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி (C.T.B.), விநாயகமூர்த்தி (கனடா), காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரமூர்த்தி, சிவமூர்த்தி, கிருபானி (கனடா), கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகநாதன் (திருகோணமலை), சர்வேஸ்வரன், நாகேஸ்வரி, சத்தியவதி, குமுதினி (கனடா), தேவராசா (கனடா), கங்காதேவி (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான தம்பு, சின்னாச்சிப்பிள்ளை, கதிரவேலு, பொன்னையா, பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2002) புதன்கிழமை கனடாவில் இடம்பெறவிருக்கின்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியமதவடி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.* (5250)
தகவல்: தேவதாஸ் (மகன்)
சர்வேஸ்வரன் (மருமகன்-ஐயக்கோன்)

## திருமதி சிவபாதசுந்தரம் சரஸ்வதி (தங்கம்)

கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி சிவபாதசுந்தரம் சரஸ்வதி 23.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திருவாசகத்தின் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) அன்புத்தாயாரும் நகுலாம்பிகையின் அன்பு மாமியாரும் கஜன், மிதுனா, மகீஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.06.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்குக் கட்டைபறிச்சான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"தியாகராஜ பவனம்", கொடிகாமம்.* (5245)
தகவல்: இந்திரன்

## தம்பையா பரநிருபசிங்கம்

*(இளைப்பாறிய அதிபர், நயினாதீவு மகா வித்தியாலயம்)*

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பையா பரநிருபசிங்கம் (முன்னாள் இளைப்பாறிய அதிபர், நயினாதீவு மகா வித்தியாலயம்) நேற்று (25.06.2002) செவ்வாய்க்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - தையலம்மையின் அன்பு மகனாரும் காலஞ்சென்ற அமுதலிங்கம் - பார்வதியின் அன்பு மருமகனும் வசந்தகுமார் (எழுதுவினைஞர், திருகோணமலை), ரவீந்திரா (ஜேர்மனி), சுவர்ணன் (லண்டன்), தவநிதி (எழுதுவினைஞர், நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயம்), சுரேஸ்குமார் (ஆசிரியர், அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோன்மணி, காலஞ்சென்ற செல்லத்துரை யோகம்மா, அன்னம்மா மற்றும் பாலசிங்கம் (சுங்கவரித் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பேரின்பராணி, சசிமாலா, வைதேகி ஆகியோரின் அன்பு மாமனாரும் மாலினிமணி, ஜெயலெட்சுமி, இராசலெட்சுமி, வேதநாயகி, மருதையினார், புஸ்பவதி, மகாலிங்கம், திலகேஸ்வரி, காலஞ்சென்ற கிருஸ்ணசாமி, நாகேசு, சிவலிங்கம் மற்றும் சிவகங்கை, பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற காமாட்சி, ஆ.சி.பழனிவேலு, மகாதேவா, சாம்பசிவம், இராசேஸ்வரி, சுரேந்திரநாதன், நேசமலர், சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*7ஆம் வட்டாரம், நயினாதீவு.* (C/22701)
தகவல்: ப.சுரேஸ்குமார் (மகன்) (அகிலன்-ஆசிரியர்)

## நாகலிங்கம் சோமசுந்தரம்

*(ராஜா ஸ்ரோர்ஸ் - நீர்கொழும்பு)*

வேலணை கிழக்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சோமசுந்தரம் அவர்கள் நேற்று (25.06.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - நாகமுத்து ஆகியோரின் அன்பு மகனும் வள்ளிநாயகி (பூபதி)யின் அன்புக் கணவரும் மங்களேஸ்வரி (திருநெல்வேலி), நித்தியானந்தன் (வேலணை), விக்கினேஸ்வரி (வேலணை), நாகேஸ்வரி (நீர்வேலி), சதானந்தன் (ஈசன், மொத்த விற்பனையாளர் (பான்ஸி), ஆனைப்பந்தி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீசன் (காலி), சந்திரமதி, செல்வானந்தம், விஜயரங்கன், சுதாசினி (கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிழ் அழகன் (யா/பல்கலைக்கழக 2ஆம் வருட வணிகத்துறை), நீலாம்பிகை (யா/பல்கலைக்கழக 2ஆம் வருட முகாமைத்துவம்), அகலா, பிரசாந்தி, மாலினி, நிசாந்தா, பிரதீசன், நவநீதா, யமுனா, ஜினோ, பிரசன்னா, ஸ்கந்தருபன் (செல்வம் கடை), கோணேஸ்வரன் (தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்), காந்தி, உதயகுமார், வின்சன், லக்சனா, வினோபா ஆகியோரின் அன்புப் பேரனும் தவசிகா, மதுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2002) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*63.பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.* (5256)
தகவல்: சோ.சதானந்தன் (மகன்)

## கணனி நிறுவன இயக்குநர்களுக்கான அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்26

குடாநாட்டிலுள்ள கணனி நிறுவனங்களின் இயக்குநர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு பொற பதி வீதியில் அமைந்துள்ள நாமகள் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவுள்ளதால் அனைத்து இயக்குநர்களையும் கலந்துகொள்ளுமாறு கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ள தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ம-9)

## கஞ்சா விற்றவர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஜூன்26

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய தீர்த்தத் திருவிழா அன்று கஞ்சா விற்பனை செய்ததாகக் கூறப்படும் நபர் நேற்று யாழ்.நீதிமன்றில் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

மன்றில் ஆஜர் செய்யப்பட்ட அந்த நபரை இன்று புதன்கிழமை வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டதுடன் குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்யுமாறு பொலீஸாருக்கும் பணிப்புரை விடுத்தார். (ஒ-10)

## யோகர் சுவாமி சமாதிக் கோயில் மீண்டும் நிர்வாகத்திடம்

கொழும்புத்துறை,ஜூன்26

கடந்த காலங்களில் படையினரின் பாவனையிலிருந்த கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சமாதிக் கோவில் பகுதி மீண்டும் அதன் நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிவத்தொண்டன் அடியார்கள் சமாதிக் கோவிலையும், அதன் சூழலையும், சுத்தம் செய்து வருவதுடன் விரைவில் ஆராதனைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-13-ரி)

## ஜே.வி.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது. நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்த மறியற்போராட்டத்தின் காரணமாக அப்பகுதியில் சிறிதுநேரம் போக்குவரத்துக்குத் தடங்கல் ஏற்பட்டது.

பல்வேறு கோஷங்கள் எழுப்பிய வண்ணம் ஏராளமானவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் சுலோகங்கள் அடங்கிய பதாகையையும் தம்முடன் வைத்திருந்தனர்.

இவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) உறுப்பினர்களும் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

போராட்டத்தால் போக்குவரத்துத் தடங்கல் ஏற்பட்டதை அடுத்து அப்பகுதிக்கு வந்த பொலீஸார் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டனர். 12.30 மணிக்கு ஆரம்பமான போராட்டம் பிற்பகல் 1.30 மணியுடன் முடிவடைந்தது. (ம-8-10-ரி)

## மூதூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூதூரின் பல்வேறு பகுதிகளிலும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன. மூதூரில் உள்ள தமது குடும்பத்தவர்களை பார்வையிட வவுனியாவிலிருந்து சென்ற 35 வயதான மீன்பிடி இன்ஸ்பெக்டர் ஒருவர் வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகினார். அவர் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஒருவர் இராணுவ கவசவாகனம் மோதியதில் காயமடைந்தார். இவர் மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவர்கள் தவிர மற்றும் மூவரும் வெவ்வேறு சம்பவங்களில் ஆங்காங்கே காயமடைந்தனர்.

இரண்டுபேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது. அவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

நிலைமை மோசமடையவே அமைதியை நிலை நாட்டுவதற்கு இராணுவத்தினர் அழைக்கப்பட்டனர்.

பொலீஸார் ஊரடங்கைப் பிறப்பித்து மக்கள் வீடுகளை விட்டு வெளியே வராமல் தடுத்தனர். மூதூரில் சம்பவங்கள் ஓய்துவிட்டாலும் பதற்ற நிலை தொடர்கிறது நாளையும் இது நீடிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (ம)

## நாளைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

குடாநாட்டில் உள்ள சகலரும் இந்தப் பேரணியில் பங்குபற்றி ஒன்றுபட்ட சமாதானக் குரலை உரக்க ஒலிக்கச் செய்யவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கோரியுள்ளார். (ம-3)

## தீவக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணையில் மக்களைச் சந்தித்து விவரத்தைக் கேட்டறிந்து கொண்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்கள் நடத்தியிருந்தனர்.

அதன்பின்னர் இந்தச் சம்பவம் தொடர்பாக பக்கசார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள சுயாதீன ஆணைக் குழுவை அரசு நியமிக்க வேண்டும் என்று கண்காணிப்புக் குழு சிபார்சு செய்திருந்தது.

இந்தச் சிபார்சை ஏற்று சுயாதீன ஆணைக்குழு ஒன்றை அமைக்க பிரதமர் இணங்கியுள்ளார் என்றும் -

அந்தக் குழு 14 நாள்களுக்குள் விசாரணை பெறுபேறுகளையும் விதந்துரைகளையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுள்ளார் என்றும் -

சமாதான நடவடிக்கைகளுக்கான செயலணித் தலைவர் பேர்னாட் குணதிலக கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவில் விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படும் ஒருவரும், ஓய்வுபெற்ற பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவரும் உயர் நீதிமன்ற இளைப்பாறிய நீதியரசர் ஒருவரும் இடம்பெறுவர் எனத் தெரியவருகின்றது.

கண்காணிப்புக் குழுவின் அதிகாரி ஒருவரும் இந்த ஆணைக் குழுவில் அங்கம்வகிக்க சிபார்சு செய்யப்பட்டபோதும் ஆணைக்குழுவின் நடு நிலைமைத் தன்மையைப் பொறுத்து அது பின்னர் கைவிடப்பட்டதாகவும் தெரியவந்தது. (ம-3)

## புலிகளுக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி[illegible] மூதூர் கிழக்கில் கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டன. காலை 10 மணியளவில் மூதூர் கிழக்கின் பல பகுதிகளில் இப்பேரணிகள் ஆரம்பிக்கப்பட்டன. முற்பகல் 11.30 மணியளவில் இப்பேரணிகள் நாவலடி மைதானத்தைச் சென்றடைந்தன.

மக்கள் உணர்ச்சி பொங்க இப்பேரணிகளில் கலந்துகொண்டனர். பேரணிகளின் முடிவில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. சில வீதிகளில் டயர்கள், மரக்குற்றிகள் எரிக்கப்பட்டன. இதனால் அப்பகுதிகள் ஒ[illegible] புகை மண்டலமாக இருந்தன.

ஹர்த்தால் நடத்தப்பட்ட[illegible] கட்டைபறிச்சான் அம்மச்சி ஆலய உற்சவம் நடைபெறவில்லை. திருகோணமலை முத்துக்குமாரசாமி ஆலயத்தில் இடம்பெறவிருந்த எண்ணெய் சாத்தல் பிற்பகலிலேயே நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

ஹர்த்தாலை முன்கூட்டியே அறிவிக்காததால் கல்முனையில் காலையில் அன்றாட நடவடிக்கைகள் இடம்பெற்றபோதும் பகல் 10 மணிக்குப் பின்னர் நகர் ஸ்தம்பித்தது. கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு முன் பிரதான வீதியிலும் பாத்திமா கல்லூரிக்கு முன்பும் வீதிக்குக் குறுக்கே கருங்கற்கள் போடப்பட்டிருந்தன.

இன்றும் ஹர்த்தால் தொடரும் என்று கூறப்பட்டது.

கல்முனை - மட்டக்களப்பு, கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - அம்பாறை நெடுஞ்சாலைகளில் எவ்வித வாகனப் போக்குவரத்தும் இடம்பெறவில்லை. இதன் காரணமாக அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அரச அலுவலகங்கள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன. மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் யாவும் இயங்கவில்லை.

ஹர்த்தால் நடைபெற்றபோது பாண்டிருப்பு, கல்முனை ஆதார வைத்தியசாலை சந்தி என்பனவற்றுக்கருகில் வீதியின் குறுக்காக கட்டைகள் (மரக்குற்றிகள்) போட்டு வீதித்தடை ஏற்படுத்தப்பட்டது.

மட்டக்களப்புப் பகுதியிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் முஸ்லிம் பிரதேசங்கள் தவிர ஏனைய பிரதேசங்கள் செயலிழந்திருந்தன. பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வங்கிகள் என்பன இயங்கவில்லை. கிழக்கு பல்கலைக்கழகம் தொழில்நுட்பக் கல்லூரி, அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பனவும் இயங்கவில்லை.

போக்குவரத்துக்கள் அனைத்தும் ஸ்தம்பித்திருந்தன. வாழைச்சேனை பொதுச்சந்தையும் கூடவில்லை. (ம-6-12)

## யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மம் போன்ற பகுதி மக்கள் அனைவரும் நாளை துரையப்பா விளையாட்டரங்கில் காலை 10 மணிக்கு முன்பாக ஒன்றுகூடுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

அங்கிருந்து கூட்டம் நடைபெறும இடமான ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்குப் பேரணி புறப்பட்டுச் செல்லும். முடிவில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

மக்கள் எழுச்சிப் பேரணியில் பொதுமக்கள் கலந்துகொள்ள வசதியாக தனியார் சிற்றூர்தி, பாரஊர்தி உரிமையாளர்கள் தங்கள் சேவையினூடாகப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் நாளை ஏற்பாடு செய்துள்ள மக்கள் எழுச்சிப் பேரணி தொடர்பான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான சிறப்புக்கூட்டம் நேற்றுப்பிற்பகல் யாழ்நகரில் இடம்பெற்றது.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் இருந்து பொதுமக்களை ஏற்றிவரும் வாகனங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கம் முன்பாக வந்துசேருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சமாதான விரோத சக்திகளுக்கு எதிராக மக்கள் கொண்டிருக்கின்ற அதிருப்தியின் வெளிப்பாடாகவே இப்பேரணி அமைந்துள்ளது எனவும் -

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாடு வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்ற பேரணியாகவும் இது அமையுமென வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை -

இக்கண்டனப் பேரணியில் யாழ்.மாவட்ட மாணவர் சமூகமும் பங்கேற்கும் என யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இக்கண்டன எழுச்சிப்பேரணி ஊடாக எமது உணர்வலைகளை வெளிப்படுத்த அனைத்து மக்களும் அணிதிரளுமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ம-3)


**நிகழ்ச்சி மாற்றம்**

முகாமைத்துவ மாணவர் மன்றத்தால் நடத்தப்படும் "Management Students' Nite" என்னும் நிகழ்வு 27.06.2002 (வியாழக்கிழமை) மாலை 2.30 மணி தொடக்கம் நடைபெறும் என்பதை அனைத்து முகாமைத்துவ மாணவர்களுக்கும் அறியத் தருகிறோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(5240)

**COOL LAMINATION - கவரிடுதல்**

நினைவுமலர் கவர், புத்தககவர், விழாமலர்கவர், புகைப்பட அல்பம் என்பன *Laminating* செய்து கொடுக்கப்படும்.

பிள்ளையார் அச்சகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 3/=

**வினாடி வினாப் போட்டி - 2002**

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் சண்டிலிப்பாய் கோட்டமட்டத்தில் உயர்தர மாணவர்கள் மத்தியில் நடத்தப்படும் **வினாடி வினாப் போட்டி - 2002.**

காலம் : இன்று 26.06.2002 காலை 8.30 மணி
இடம் : புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபம்

*ஹென்றிசியன்ஸ்,*
*யாழ்.பல்கலைக்கழகம்*
(5242)

**G.A.Q., 1st in Com. 2003**
(யாழ்., பேராதனை (வெளிவாரி)

- மேற்குறித்த பட்டப்பாட நெறிக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
- இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. பல்கலைக்கழகப் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்துதரப்படும்.
- விவரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு : S.அருள்நங்கை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி - யாழ்.
(5215)

**எமது புதிய வீடியோ CD வெளியீடு**
★தென்காசிப்பட்டணம்
★ஏழுமலை
ஒரிஜினல் CD
VCD ரூபா 500
அல்டி எலக்றோனிக்ஸ்
யாழ்ப்பாணம்.
(C-22703)

**எமது புதிய வீடியோ CD வெளியீடு**
சரத்குமார், தேவயானி, நெப்போலியன்
★தென்காசிப்பட்டனம்
★ஏழுமலை
ITN பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.
(C-22704)

**OXFORD INSTITUTE**
K.K.S. Road, Chunnakam
Spoken English and Grammar
By-BRITTO புதுபிரிவு II
ஆரம்பம்: 27.06.2002
(5115)

**ஈசன் கல்வி நிலையம்**
எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகின்றது.
**A/L DAY CLASS**
**வர்த்தகப் பிரிவு**
காலம்: 27.06.2002 (THU.)
நேரம் : 8.00 a.m.
(5150)

**தேவை**
சேல்ஸ் விற்பனையாளர்கள் தேவை.
நேரில் வரவும்.
றொலெக்ஸ் பேக் மாட்
*118, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.*
(5255)


## மரண அறிவித்தல்கள்

### தம்பிஜயா முருகானந்தன்

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டி அரச தொடர்மாடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா முருகானந்தன் (இரசாயனவியல் ஆசிரியர், கொழும்பு உவிஸ்லிக் கல்லூரி) 24.06.2002 திங்கட்கிழமை காலை அகாலமரணமானார்.

அன்னார் தம்பிஜயா - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், பரிபூரனேஸ்வரி (ஆசிரியர், கணபதி வித்தியாலயம், கொட்டாஞ்சேனை), பரிமளகாந்தன் (கனடா), முருக்தாசன் (கனடா), கிருஷ்ணானந்தன் (லண்டன்), சிதம்பரானந்தன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் லலிதரன், பவானி, ஜெயகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கீர்த்திகன், கவீஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அர்வீரின் அன்பு சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2002) வியாழக்கிழமை பொறளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*M30, அரச தொடர்மாடி,*
*பம்பலப்பிட்டி.*
*T.P: 503401* (5258)

தகவல்:
தம்பிஜயா (தகப்பன்)
பழைய பாடசாலை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

### பொன்னர் கந்தசாமி

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் தற்போது உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட பொன்னர் கந்தசாமி (ஓய்வுபெற்ற R.D.H.S. ஊழியர், சுகாதாரத் திணைக்களம், யாழ்.) நேற்று (25.06.2002) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - எள்ளுப்பிள்ளை தம்பதிகளின் மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகதீசன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி, கிருபாகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் ஜெகராகினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையாரும் கமலராசா, சாந்தினிதேவி (பிரான்ஸ்), சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ராகுலன், நிரோஜினி, சுபோதினி, சுமித்திரா ஆகியோரின் பாசமிகு பேரனும் பரமேஸ்வரி (பிரான்ஸ்), நாகராசா (பிரான்ஸ்), மகாலிங்கம் (ஜேர்மனி), குணராசா (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-06-2002) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (5260)

தகவல்:
மகேஸ்வரி (மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.